# தினபூமி

thinaboomi.com

பூமி: 21 சுற்று: 155 வைகாசி 16

RNI Regn. No. 61494/94

வேலூர், வெள்ளி, மே 30, 2025

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00




**130 நாட்கள் பணிக்காலம் நிறைவு: அதிபர் ட்ரம்ப் நிர்வாகத்தில் இருந்து விலகுவதாக எலான் மஸ்க் அறிவிப்பு**

...2-ம் பக்கம்

**விரைவில் ஆக்கிரமிப்பு காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாகும்: மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங்**

...3-ம் பக்கம்

**இந்திய டெஸ்ட் அணியில் ஸ்ரேயஸ் அய்யர் தேர்வாகாதது குறித்து கம்பீர் மழுப்பல் பதில்**

...6-ம் பக்கம்





● முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித்துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு, கிழக்கு கடற்கரை சாலையில் 37.99 ஏக்கர் நிலப்பரப்பில் 525 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள உலகத்தரம் வாய்ந்த கலைஞர் பன்னாட்டு மாநாடு மையத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உடனடியாக இணைய வழியில் பெறும் வகையில் சுகாதார சான்றிதழ் உள்ளிட்ட

# பத்து அரசு சேவைகளை எளிமையாக்கும் திட்டம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

சென்னை, மே 30-

**மனிதவள மேலாண்மைத் துறை சார்பில் உடனடியாக இணைய வழியில் பெறும் வகையில் முதல் கட்டமாக சுகாதார சான்றிதழ் உள்ளிட்ட 10 அரசு சேவைகளை எளிமையாக்கும் 'எளிமை ஆளுமை' திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு முதியோர் இல்லங்களுக்கான உரிமச் சான்றிதழ், பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் உரிமச் சான்றிதழ்களை வழங்கினார்.**

**எளிமை ஆளுமை....**

தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் சேவைகளில் தற்போதைய நடைமுறைகளை ஆராய்ந்து, அதிலுள்ள முக்கிய விதிமுறைகளை சீர் செய்து, எளிமை ஆளுமை திட்டத்தின் கீழ் அனைவரும் சேவைகளை உடனடியாக இணைய வழியில் பெறும் வகையில் மாற்றியமைக்கப்படுகிறது. எளிமை ஆளுமை திட்டத்தை துரிதப்படுத்த இரு குழுக்கள் அமைக்கப்பட்டு முதல் குழு மூத்த அதிகாரிகளை கொண்டு படிப்படியாக வருகின்ற முன்மொழிவுகளை ஆராய்ந்து ஆலோசித்து, பின்பு இரண்டாவது குழு சட்டத்தை பின்பற்றி எவ்வாறு எளிமைப்படுத்த முடியுமோ அவ்வாறு உத்தரவுகளையிட தலைமைச் செயலாளரின் தலைமையில் இயங்குகிறது.

**முதல் கட்டமாக 10 சேவைகள்**

**சுகாதார சான்றிதழ், பொது கட்டிட உரிமம், முதியோர் இல்லங்கள் உரிமம், பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் உரிமம், மகளிர் இல்லங்கள் உரிமம், சொத்து மதிப்பு சான்றிதழ், வெள்ளை வகை தொழிற்சாலைகள் பட்டியல், புன்செய் நிலங்களை விவசாயம் அல்லாத செயல்பாட்டிற்கு பயன்படுத்த தடையின்மை சான்றிதழ், நன்னடத்தை சான்றிதழ், அரசாங்க ஊழியர்கள் கடவுச்சீட்டு பெறுவதற்கான தடையின்மை சான்றிதழ் ஆகிய பத்து சேவைகளின் நடைமுறைகளை எளிமையாக்கி மக்கள் பயன்பாட்டிற்காக இணையவழி சேவையை தொடங்கப்பட்டுள்ளது.**

**150 சேவைகளை...**

வரும் ஆண்டில் பல்வேறு துறைகளில் 150 சேவைகளை இணையவழியில் இம்முயற்சியின் கீழ் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், வணிக நடைமுறைகளை எளிமையாக்குவதன் மூலம் தொழிற்துறை வளர்ச்சிக்கு உதவிட தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் வெள்ளை வகை தொழிற்சாலைகளின் பட்டியலை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

**பல வழிமுறைகள்...**

எளிமை ஆளுமையின் மூலமாக, தற்போது நடைமுறையிலுள்ள நேரடி ஆய்வுகள், ஆவண சரிபார்ப்பு போன்ற முறைகளுக்கு மாற்றாக சுய சான்றிதழ், இணைய வழி-கே.ஒய்.சி., டிஜிட்டல் கையொப்பம் இன்னும் பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இதன்மூலமாக பொதுமக்களும் தொழில் நிறுவனங்களும் எளிமையாக்கப்பட்ட சேவைகளை விரைவாக பெற வழிவகை செய்யப்படுகிறது.

**முதல்வர் வழங்கினார்**

சென்னை தலைமை செயலகத்தில் பயனாளிகளுக்கு முதியோர் இல்லங்களுக்கான உரிமச் சான்றிதழ், பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் உரிமச் சான்றிதழ், மகளிர் இல்லங்களுக்கான உரிமச் சான்றிதழ், வெள்ளை வகை தொழிற்சாலைகள் பட்டியல் விரிவாக்க சான்றிதழ் ஆகியவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

### செங்கல்பட்டில் 37.99 ஏக்கர் நிலப்பரப்பில் அமைகிறது:

# ரூ.525 கோடியில் கலைஞர் பன்னாட்டு மாநாடு மையம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல்

செங்கல்பட்டு, மே 30-

**தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு, கிழக்கு கடற்கரை சாலையில் 37.99 ஏக்கர் நிலப்பரப்பில் 525 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள உலகத்தரம் வாய்ந்த கலைஞர் பன்னாட்டு மாநாடு மையத்திற்கு அடிக்கல் நாட்டினார்.நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் மதுரை, பழங்காநத்தத்தில் ரூ.68.38 கோடி மதிப்பில் மேம்பாலம், நாமக்கல்லில் ரூ.424.38 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட நான்கு வழிச்சாலையையும் அவர் திறந்து வைத்தார்**

சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வேளாண்மை விரிவாக்க சேவைகளை உழவர்களுக்கு அவர்களின் கிராமங்களிலேயே வழங்கிடும் வகையில் "உழவரைத்தேடி வேளாண்மை-உழவர் நலத்துறை" திட்டத்தினை காணொலிக் காட்சி வாயிலாக திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டாரம், மாணிக்கமங்கலம் கிராமத்தில் தொடங்கி வைத்தார்.

அதைத் தொடர்ந்து நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், நாமக்கல் மாவட்டத்தில் 424 கோடியே 38 லட்சம் ரூபாய் செலவில் நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தப்பட்ட மல்லியக்கரை – இராசிபுரம் – திருச்செங்கோடு - ஈரோடு சாலை, மதுரை மாவட்டம், பழங்காநத்தத்தில் 68 கோடியே 38 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம், மேல்பாக்கத்தில் 6 கோடியே 32 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பழங்குடியினருக்கான மறுகுடியமர்வு குடியிருப்புகள் ஆகியவற்றை திறந்து வைத்தார். மேலும், 10, 11 மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் 9 மாணவ, மாணவியர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி, வாழ்த்தினார்.

# பிரபல நடிகர் ராஜேஷ் மறைவுக்கு முதல்வர் ஸ்டாலின் நேரில் அஞ்சலி

சென்னை, மே 30-

**மூத்த நடிகர் ராஜேஷ் மறைவுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.**



தமிழ்த் திரையுலகின் மூத்த நடிகரான ராஜேஷுக்கு (வயது 75 ) நேற்று காலை திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார். நடிகர் ராஜேஷின் உடல் சென்னை, ராமாபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. நடிகர் ராஜேஷ் மறைவுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

நடிகர் ராஜேஷ் மறைவுக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:- தமிழ்த் திரையுலக மூத்த நடிகர் ராஜேஷ் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருத்தமடைந்தேன். முத்தமிழறிஞர் கலைஞர் மீது அளவற்ற மரியாதையும், அன்பும் கொண்டு விளங்கினார். கலைஞரும், ராஜேஷின் திருமணம் முதலிய அவரது இல்ல நிகழ்ச்சிகளில் தவறாது கலந்து கொண்டு வாழ்த்துவது வழக்கம்.

கலைஞர் மறைவுற்ற போது, "தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் குடும்பங்களிலும் அவர் ஓர் அங்கம்" என நெகிழ்ச்சியோடு பேசி தனது இரங்கலைத் தெரிவித்தவர் ராஜேஷ் என்பதை இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கிறேன். திரைத்துறையில் அவரது நீண்ட அனுபவத்தைக் கருத்தில்கொண்டு, கடந்த 2022-ம் ஆண்டு தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் தலைவராக அவரை நியமித்தோம் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது மறைவினால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரைத்துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### குமரி, கோவை, நீலகிரி, தேனி உட்பட

# 8 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை, மே 30-

**கோவை, நீலகிரி உட்பட 8 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

நேற்று முன்தினம் (மே 28) காலை ஒடிசா கடலோரப் பகுதிகளை ஒட்டிய வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, வடக்கு திசையில் மெதுவாக நகர்ந்து, நேற்று (மே 29) காலை 5.30 மணி அளவில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மேற்கு வங்கம் - வங்கதேச கடலோரப்பகுதிகளில் வலுப்பெற்று, 8.30 மணி அளவில் அதே பகுதிகளில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக நிலவியது.

இது வடக்கு திசையில் மெதுவாக நகர்ந்து, மேற்கு வங்கம் - வங்கதேசம் கடற்கரை பகுதிகளில், சாகர் தீவுகளுக்கும்- கேபுபாராவுக்கும் (வங்கதேசம்) இடையே நேற்று பிற்பகல் கரையை கடந்தது.

இதன் காரணமாக இன்று (மே 30ம் தேதி), தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் தரைக்காற்று 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

நீலகிரி மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஒருசில இடங்களிலும், தேனி, தென்காசி, திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும்,

திருப்பூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

மே 31 முதல் ஜூன் 4ம் தேதி வரை, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும், என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், நாளை (மே 30) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

அதிகபட்ச வெப்பநிலை 37 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28-29 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆர்.பி.ஐ. விதிகளால் கூட்டுறவு வங்கிகளுக்கு பாதிப்பு இருக்காது

## அமைச்சர் பெரிய கருப்பன் தகவல்

சென்னை, மே 30-

**நகைக்கடன் குறித்த ரிசர்வ் வங்கி விதிகள் தொடக்க வேளாண் வங்கிகளுக்கு பொருந்தாது என்று அமைச்சர் பெரிய கருப்பன் கூறியுள்ளார்.;**

சென்னை தீவுத்திடல் சத்தியவாணி முத்து நகரில் அமையவுள்ள ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாக இடத்தினை கூட்டுறவுத் துறை அமைச்சர் பெரியகருப்பன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அமைச்சர் பெரிய கருப்பன் கூறியதாவது:- நகைக்கடன் குறித்த ரிசர்வ் வங்கி விதிகள் தொடக்க வேளாண் வங்கிகளுக்கு பொருந்தாது. ரிசர்வ் வங்கி விதிகளால் கூட்டுறவு வங்கிகளுக்கு பெரிய அளவில் பாதிப்பு இருக்காது. கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.60 ஆயிரம் கோடி நகை கடன் தரப்பட்டுள்ளது. நியாய விலை கடைகளில் ஆள் பற்றாக்குறை இல்லாமல் பார்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# யு.பி.எஸ்.சி. தேர்வு - ஹால்டிகெட் வெளியீடு

புதுடெல்லி, மே 30-

**மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் (யு.பி.எஸ்.சி.) 2025 பொறியியல் (முதற்கட்ட) தேர்வுக்கான ஹால்டிக்கெட்டுகளை வெளியிட்டுள்ளது**

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். உள்ளிட்ட சிவில் சர்வீசஸ் தேர்வுகள் உள்பட பல்வேறு மத்திய அரசு பணிகளுக்கான தேர்வுகளை மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் (யு.பி.எஸ்.சி.) ஆண்டுதோறும் நடத்துகிறது. இதற்காக தேர்வர்கள் பதிவு செய்யவும், விண்ணப்பிக்கவும் புதிய இணையதளத்தை யு.பி.எஸ்.சி. நேற்று முன்தினம் தொடங்கியது.


அதன்படி https://upsconline.nic.in எனப்படும் இந்த புதிய இணையதளம் மூலம் தான் இனிமேல் மேற்படி தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க முடியும். இதன் மூலம் பழைய ஒருமுறை பதிவு முறை இனிமேல் செல்லுபடியாகாது. புதிய இணையதளம் மூலம் தேர்வர்கள் நேரம் சேமிப்பு, கடைசி நேர நெருக்கடிகள் இன்றி யு.பி.எஸ்.சி. நடத்தும் தேர்வுகளுக்கு எளிமையாக விண்ணப்பிக்க முடியும் என யு.பி.எஸ்.சி. வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. இந்நிலையில் மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் (UPSC) 2025 பொறியியல் (முதற்கட்ட) தேர்வுக்கான ஹால் டிக்கெட்டுகளை வெளியிட்டுள்ளது. பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் தங்கள் ஹால் டிக்கெட்டுகளை அதிகாரப்பூர்வ வலைத்தளங்களான upsc.gov.in மற்றும் upsconline.gov.in இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்வு ஜூன் 8ம் தேதி அன்று நடைபெற உள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| ↑ 320.70 | ↑ 81.15 |
| பாயிண்ட் 81,633.02 | பாயிண்ட் 24,833.60 |



**தங்கம்**
1 சவரன் ₹71,160
1 கிராம் ₹8,895



**வெள்ளி**
1 கிலோ ₹111,000
1 கிராம் ₹111.00

**டாலர்** ₹85.41

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

### 130 நாட்கள் பணிக்காலம் நிறைவு:
# அதிபர் ட்ரம்ப் நிர்வாகத்தில் இருந்து விலகுவதாக எலான் மஸ்க் அறிவிப்பு

**வாஷிங்டன், மே 30-**

அமெரிக்க அதிபர் டிரம்ப் நிர்வாகத்தில் இருந்து விலகப்போவதாக எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.



அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவியேற்ற பிறகு பின் எலான் மஸ்க்கை சிறந்த நிர்வாகத்துக்கான துறை தலைவர் என்ற சிறப்பு பதவியில் அமர்த்தினார். அமெரிக்க அரசின் செலவுகளை குறைப்பது, நிறுவனங்களை சீரமைப்பது போன்ற பணிகள் ஒப்படைக்கப்பட்டன. மஸ்க் பொறுப்பேற்ற பின் இதுவரை அரசின் செலவுகளில் 10 லட்சம் கோடி ரூபாயை மிச்சப்படுத்தி இருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன. மஸ்க் இந்த பதவியில் 130 நாள் பணியாற்றுவதற்கு ஒப்புக் கொண்டிருந்தார். அவரின் பதவிக்காலம் இந்த மாத இறுதியில் முடிவடைகிறது.

இந்நிலையில் நேற்று அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பின் நிர்வாகத்தில் இருந்து வெளியேறுவதாக, எலான் மஸ்க் அறிவித்துள்ளார். இதுகுறித்து சமூக வலைத்தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறி இருப்பதாவது: சிறப்பு அரசு ஊழியராக எனது திட்டமிடப்பட்ட காலம் முடிவடையும் நிலையில், வீண் செலவுகளைக் குறைப்பதற்கான வாய்ப்பை வழங்கியதற்காக அதிபர் டிரம்புக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## தங்கம் விலை சற்று சரிவு

**சென்னை, மே 30-**

சென்னையில் நேற்று (மே 29)22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ. 320 குறைந்து, ஒரு சவரன் ரூ.71,160க்கு விற்பனையானது. கிராமுக்கு ரூ.40 குறைந்து, ஒரு கிராம் ரூ. 8,895க்கு விற்பனையானது.

தமிழகத்தில் மே 27-ல் தங்கம் கிராம், 8,995 ரூபாய்க்கும், சவரன், 71,960 ரூபாய்க்கும் விற்பனையானது. நேற்று முன்தினம் (மே 28), தங்கம் விலை கிராமுக்கு 60 ரூபாய் குறைந்து, 8,935 ரூபாய்க்கு விற்பனையானது. சவரனுக்கு 480 ரூபாய் சரிவடைந்து, 71,480 ரூபாய்க்கு விற்பனையானது.

இந்நிலையில் நேற்று (மே 29)22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ. 320 குறைந்து, ஒரு சவரன் ரூ.71,160க்கு விற்பனையானது. கிராமுக்கு ரூ.40 குறைந்து, ஒரு கிராம் ரூ. 8,895க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை சவரனுக்கு ரூ.320 குறைந்தது நகைப்பிரியர்களுக்கு சற்று மகிழ்ச்சியை அளித்துள்ளது.



**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச்செயலகத்தில், 10, 11 மற்றும் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் குடும்பத்தைச் சேர்ந்த 9 மாணவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்வின் போது, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் நாசர், தலைமைச் செயலாளர் முருகானந்தம் ஆகியோர் உடனிருந்தனர்.**

## ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் கரையை கடந்தது

**சென்னை, மே 30-**

வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேற்கு வங்கத்திற்கும் வங்கதேசத்திற்கும் இடையே கரையை கடந்தது.

வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி, நேற்று காலை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது. இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேற்கு வங்காளம்-வங்கதேசம் இடையே நேற்று கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேற்கு வங்கத்திற்கும் வங்கதேசத்திற்கும் இடையே கரையை கடந்தது. மேலும் வலுவிழந்து தாழ்வு மண்டலமாக மாலைக்குள் மாறும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த தாழ்வு மண்டலத்தால், கேரளா, கர்நாடகா மற்றும் தமிழக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களான கோவை, நீலகிரி, தேனி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று (வெள்ளிக்கிழமை) தென் மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சேலம் மாநகராட்சி கூட்டத்தில் பரபரப்பு:
# அ.தி.மு.க. - தி.மு.க. கவுன்சிலர்கள் மோதல்

**சேலம், மே 30-**

சேலம் மாநகராட்சி மன்ற கூட்டத்தில் அ.தி.மு.க. எதிர்க்கட்சித் தலைவரின் கன்னத்தில் அறைந்து தி.மு.க. கவுன்சிலர் சுகாசினி தாக்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சேலம் மாநகராட்சியின் மாமன்ற இயல்பு மற்றும் அவசரக் கூட்டம் நேற்று மேயர் ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர்கள் தங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை குறித்து எடுத்துரைத்தனர். அப்போது, மாமன்ற எதிர்க்கட்சித் தலைவர் யாதவ மூர்த்தி எழுந்து, கட்டிட அனுமதி முறையற்ற வகையில் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சருக்கு நெருக்கமானவர்களுக்கு மட்டுமே டெண்டர்கள் வழங்கப்படுகிறது என குற்றம்சாட்டி பேசினார் .

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த தி.மு.க. உறுப்பினர்கள், அவர் மீது பேப்பர் ஒன்றை தூக்கி எறிந்தனர். மேலும், தி.மு.க. கவுன்சிலர் சுகாசினி எழுந்து அவர் அருகில் சென்று பேசியுள்ளார். அப்போது, இருவருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் முற்றியதில் ஆத்திரமடைந்த தி.மு.க. கவுன்சிலர் சுகாசினி, எதிர்க்கட்சித் தலைவர் யாதவ மூர்த்தியின் கன்னத்தில் மாறி, மாறி அறைந்தார். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. மற்ற உறுப்பினர்கள் எழுந்து இருவரையும் சமாதானப்படுத்த முயற்சி மேற்கொண்டனர். இதனால் கூட்டத்தில் சலசலப்பும், கைகலப்பும் ஏற்பட்டது . இதனையடுத்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் திடீரென மேயர் மேஜை முன்பாக அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில், தி.மு.க. கவுன்சிலர் சுகாசினி சேலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார்.

மாநகராட்சி கூட்டத்தில் தி.மு.க. பெண் கவுன்சிலர் அ.தி.மு.க. எதிர்க்கட்சி தலைவரின் கன்னத்தில் அறைந்த சம்பவத்தை கண்டித்து சேலம் மேயர் மேஜை முன்பாக அமர்ந்து அ.தி.மு.க.வினர் தர்ணாவில் ஈடுபட்டனர். தி.மு.க., அ.தி.மு.க. கவுன்சிலர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக கூட்டத்தை பாதியிலேயே முடித்துவிட்டு மேயர் ராமச்சந்திரன், ஆணையாளர் இளங்கோவன் கூட்ட அரங்கை விட்டு வெளியேறினர்.

சேலம் மாநகராட்சி கூட்டத்தில் அ.தி.மு.க. எதிர்க்கட்சி தலைவரின் கன்னத்தில் அறைந்து தி.மு.க. பெண் கவுன்சிலர் தாக்கிய சம்பவத்தை கண்டித்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் மேயர் மேஜை முன்பாக அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டனர்.

### அதிகார வரம்பை மீறுவதாக கண்டனம்:
# அதிபர் ட்ரம்பின் இறக்குமதி வரிக்கு தடை விதித்த அமெரிக்க நீதிமன்றம்

**நியூயார்க், மே 30-**

டொனால்டு ட்ரம்ப் விதித்த இறக்குமதி வரிகளுக்கு தடை விதித்துள்ளது நியூயார்க்கில் உள்ள சர்வதேச வர்த்தக நீதிமன்றம், மேலும், அதிபருக்கு உள்ள சட்டத்துக்கு உட்பட்ட அதிகார வரம்புகளை மீறி ட்ரம்ப் செயல்படுவதாகவும் கோர்ட் அவரைக் கடிந்துள்ளது.

அமெரிக்க தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஜன.20-ம் தேதி 2-வது முறையாக அதிபராக பதவியேற்றார். அதிபர் பதவியேற்ற பிறகு அமெரிக்க நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் முதல் முறையாக உரையாற்றுகையில், “அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு இந்தியா 100 சதவீத வரி விதிக்கிறது. இதேபோல் மற்ற நாடுகளும் அதிக வரி விதிக்கின்றன. இது நியாயமற்றது. ஆட்டோமொபைல் பொருட்களுக்கு 100 சதவீதத்துக்கும் அதிகமாகவே இந்தியா வரி விதிக்கிறது. ஐரோப்பிய யூனியன், இந்தியா, சீனா, பிரேசில், மெக்சிகோ, கனடா போன்ற நாடுகள், நாம் விதிக்கும் வரியை விட அதிக வரிகளை விதிக்கின்றன. அதை பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? எனவே, மற்ற நாடுகள் எவ்வளவு வரி விதிக்கின்றனவோ, அதே அளவுக்கு அமெரிக்காவும் வரி விதிக்கும். என்றார்.

அதன்படி ஒவ்வொரு நாட்டுக்கும் எவ்வளவு வரி என்ற பட்டியலையும் வெளியிட்டார். இதில் இந்தியாவுக்கு 27% வரி விதிக்கப்பட்டது. சீனாவுடனான வரி யுத்தம் மட்டும் நீண்டு கொண்டே சென்றது. ட்ரம்ப்பின் புதிய வரி விதிப்பு கொள்கையால் உலகளவில் நிச்சயமற்ற தன்மை ஏற்பட்டது . இந்நிலையில் சீனாவைத் தவிர பிற உலக நாடுகளுக்கு இறக்குமதி வரி சராசரியாக 10 சதவீத அடிப்படை வரி மட்டும் வசூலிக்கப்படும் என்று ட்ரம்ப் அறிவித்தார்.

ட்ரம்ப் வரியை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கு யுஎஸ் பெடரல் வர்த்தக நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிமன்றம், ட்ரம்ப் வரி விதிப்புக்கு தடை விதித்தது. அரசுத் தரப்பில், ட்ரம்ப்பின் இந்த வரி விதிப்பு தான் அண்மையில் இந்தியா - பாகிஸ்தானுக்கு இடையேயான மோதலை முடிவுக்குக் கொண்டுவர உதவியது. அந்த இருநாடுகளுக்கும் அமெரிக்காவுடனான வர்த்தகத்தில் சலுகைகள் வழங்கியே முழு வீச்சுப் போராக வேண்டியிருந்ததை தடுத்து நிறுத்தினோம். என்று வாதிடப்பட்டது. ஆனால் இந்த வாதத்தை அமெரிக்க நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும், அதிபருக்கு உள்ள சட்டத்துக்கு உட்பட்ட அதிகார வரம்புகளை மீறி ட்ரம்ப் செயல்படுவதாகவும் கோர்ட் அவரைக் கடிந்துள்ளது. அமெரிக்க குடியுரிமை பெறாத பெற்றோருக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த பிறப்பின் அடிப்படையிலான குடியுரிமையை ரத்து செய்யும் அதிபர் டொனால்டு ட்ரம்ப்பின் உத்தரவுக்கு அமெரிக்க ஃபெடரல் நீதிமன்றம் தடை விதித்தது.

### வாசிப்பதை வழக்கமாகக் கொண்டவர்:
## நடிகர் ராஜேஷுக்கு கமல்ஹாசன் புகழாரம்

**சென்னை, மே 30-**

வாசிப்பதையும், சிந்திப்பதையும் வழக்கமாகக் கொண்டவர் நடிகர் ராஜேஷ் என்று நடிகர் கமல்ஹாசன் கூறினார்.

தேடல் உள்ள நடிப்புக் கலைஞர்களில் அதிகம் வாசிப்பதையும், வாசித்ததைச் சிந்திப்பதையும் வழக்கமாகக் கொண்டவர் அன்பு நண்பர் ராஜேஷ். தன் வாழ்வின் இறுதிவரை உற்சாகமும் செயல்பாடும் குறையாமல் வாழ்ந்த அவரது மறைவு பெரும் வருத்தத்தை ஏற்படுத்துகிறது” என்று நடிகரும், மநீம தலைவருமான கமல்ஹாசன் இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில், “தேடல் உள்ள நடிப்புக் கலைஞர்களில் அதிகம் வாசிப்பதையும் வாசித்ததைச் சிந்திப்பதையும் வழக்கமாகக்கொண்டவர் அன்பு நண்பர் ராஜேஷ்.

தன் வாழ்வின் இறுதிவரை உற்சாகமும் செயல்பாடும் குறையாமல் வாழ்ந்த அவரது மறைவு பெரும் வருத்தத்தை ஏற்படுத்துகிறது. அவரை இழந்து வேதனைப்படும் குடும்பத்தாருக்கு என் ஆறுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.

### ஆசிரியரில் இருந்து நடிகர் வரை:
# ராஜேஷின் வாழ்க்கை பயணம்

**சென்னை, மே 30-**

தமிழ் சினிமாவின் மூத்த நடிகர் ராஜேஷ், 75, சென்னையில் காலமானார்.



நேற்று (மே 29) காலை திடீரென அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டார். ஆனால் வழியிலேயே அவரது உயிர் பிரிந்தது. முதல்வர் ஸ்டாலின், விடுதலை சிறுத்தை கட்சி தலைவர் திருமாவளவன் நேரில் அஞ்சலி செலுத்தினர். மேலும் திரையுலகினர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியை சேர்ந்த ராஜேஷ் 1949ம் ஆண்டு டிசம்பரில் 20ல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை திண்டுக்கல், வடமதுரை ஆகிய ஊர்களில் படித்து, பி.யூ.சி. படிப்பை காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் படித்தார். பின்னர் ஆசிரியருக்கான பயிற்சியையும் பெற்ற அவர் சென்னை, ராயபுரம், புரசைவாக்கம் போன்ற பகுதிகளில் உள்ள பள்ளிகளில் சில ஆண்டுகள் ஆசிரியராக வேலை பார்த்தார். சினிமா மீது ஆர்வம் கொண்ட இவர் ஆசிரியர் பணியில் இருந்து கொண்டே சினிமா வாய்ப்பு தேடினார். நடிகை சுகுமாரியின் மூலம் இயக்குநர் கே பாலசந்தரின் ‘அவள் ஒரு தொடர்கதை’ படம் மூலம் மக்கள் தொகை கணக்கெடுப்பாளராக சிறு வேடத்தில் நடித்தார்.

1979ல் பிவி பாலகுரு இயக்கிய ‘கன்னிப் பருவத்திலே’ படம் மூலம் நாயகனாக அறிமுகமானார். இதில் வில்லனாக பாக்யராஜ் நடித்தார். இப்படம் சூப்பர் ஹிட்டானது. பாக்யராஜ் இயக்கம், நடிப்பில் வெளிவந்த ‘அந்த 7 நாட்கள்’ படம் இவரை மேலும் பிரபலமாக்கியது.

தொடர்ந்து ‘அச்சமில்லை அச்சமில்லை, ஆலயதீபம், ‘சிறை, அம்மாவும் நீயே அப்பாவும் நீயே’ போன்ற படங்கள் இவரது திரைப்பயணத்தில் குறிப்பிடும்படியான திரைப்படங்களாக அமைந்தன. மென்மையான நடிப்பிற்கும், கணீர் குரலுக்கும் சொந்தக்காரரான ராஜேஷ் ‘டும் டும் டும்’, ‘ஜுட்’, ‘மஜா’, ‘உள்ளம் கேட்குமே’, ‘ராம்’ போன்ற படங்களில் மறைந்த மலையாள நடிகர் முரளிக்கும், ‘பொய் சொல்லப் போறோம்’ படத்தில் மறைந்த மலையாள நடிகர் நெடுமுடி வேணுவிற்கும் டப்பிங் கொடுத்துள்ளார்.

சினிமா தவிர்த்து ரியல் எஸ்டேட், ஹோட்டல் பிஸினஸ் போன்ற தொழில்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இவர், ஜோதிடம் பற்றி பல புத்தகங்கள், கட்டுரைகளையும் எழுதி உள்ளார். இப்படி பன்முக திறமை கொண்ட இவர் தனது 49 ஆண்டுகால கலைப்பயணத்தில் ஏறக்குறைய 150க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

இவரது மனைவி ஜோன் சில்வியா ஏற்கனவே இறந்துவிட்டார். திவ்யா, தீபக் என்ற மகளும், மகனும் உள்ளனர். ராஜேஷின் உடல் சென்னை, ராமாபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அவர் மகள் அமெரிக்காவில் இருந்து சென்னை வந்ததும் அடக்கம் செய்யப்படும். இவரின் திடீர் மறைவு திரையுலகினர், ரசிகர்கள் இடையே அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

### அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டம்:
# வங்கதேசத்தில் இடைக்கால அரசுக்கு மேலும் நெருக்கடி

**டாக்கா, மே 30-**

வங்கதேசத்தில் எதிர்க்கட்சியினர், அரசு ஊழியர்களை தொடர்ந்து தற்போது ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நாடு முழுவதும் நடைபெறும் போராட்டங்களால் இடைக்கால அரசுக்கு நெருக்கடி அதிகரித்துள்ளது.

வங்கதேசத்தில் கடந்த ஆண்டு மாணவர்கள் போராட்டம் காரணமாக பிரதமர் பதவியில் இருந்து விலகிய ஷேக் ஹசீனா, இந்தியாவில் தஞ்சம் அடைந்தார். இதையடுத்து அங்கு தலைமை ஆலோசகர் முகம்மது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு பதவியேற்றது. இவரது அரசு சீர்திருத்தம் என்ற பெயரில் பல்வேறு முடிவுகளை வலிந்து திணிப்பதாக புகார் எழுந்த நிலையில் பொதுத்தேர்தலை தாமதப்படுத்த சதி நடப்பதாக முன்னாள் பிரதமர் கலீதா ஜியா குற்றம் சாட்டினார். இந்த ஆண்டு டிசம்பருக்குள் தேர்தலை நடத்த வேண்டும் என அவரது வங்கேதச தேசியவாத கட்சி (பிஎன்பி) போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

இதற்கிடையில் இடைக்கால அரசு தன்னிச்சையாக முடிவுகளை எடுப்பதாக ராணுவ தளபதி வாக்கர்-உஸ்-ஜமான் குற்றம் சாட்டினார். வங்கதேசத்தில் இந்த ஆண்டு இறுதிக்குள் தேர்தலை நடத்த வேண்டும், ராணுவ விவகாரங்களில் தலையிடுவதை நிறுத்த வேண்டும் என அரசுக்கு அவர் எச்சரிக்கை விடுத்தார்.

யூனுஸ் அரசு அண்மையில், தவறான நடத்தைக்காக அரசு ஊழியர்களை விசாரணையின்றி 14 நாட்களுக்குள் பணிநீக்கம் செய்யும் அவசர சட்டத்தை பிறப்பித்தது. இதற்கு எதிராக அரசு ஊழியர்கள் கடந்த சனிக்கிழமை முதல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அரசுப் பணிகள் முடங்கியுள்ளன.

இந்நிலையில் வங்கசேத்தில் தற்போது தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். பதவி உயர்வு, சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இவர்கள் நாடு முழுவதும் காலவரையற்ற போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 5-ம் தேதி முதல் பகுதி அளவில் போராட்டத்தில் ஈடுபட்ட வந்த இவர்கள், கடந்த திங்கள்கிழமை முழு வேலைநிறுத்தம் தொடங்கியதாக ‘டெய்லி ஸ்டார்’ நாளேடு தெரிவிக்கிறது. ராணுவத்தின் அழுத்தத்தை தொடர்ந்து தற்போது எதிர்க்கட்சிகள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் என நாடு முழுவதும் நடைபெறும் போராட்டங்களால் வங்கதேச இடைக்கால அரசுக்கு நெருக்கடி அதிகரித்து வருகிறது.

## மகாராஷ்டிராவில் கனமழைக்கு 16 பேர் பலி

**மும்பை, மே 30-**


மகாராஷ்டிர கனமழை பாதிப்பால் இதுவரை 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

மகாராஷ்டிராவில் கடந்த ஐந்து நாட்களாக கனமழை தொடர்பான சம்பவங்களால் 16 பேர் உயிரிழந்துள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது. இவர்கள் நிலச்சரிவு, இடி, மின்னல் தாக்குதல், மரம் அல்லது கட்டிடம் இடிந்து விழுதல் போன்ற சம்பவங்களால் உயிரிழந்தனர்.

இந்த ஆண்டு வழக்கத்தை விட 8 நாட்களுக்கு முன்பாகவே தென்மேற்கு பருவமழை தொடங்கியது. அதன்படி பருவமழை தொடங்கிய மே 24-ல் இருந்தே மகாராஷ்டிராவில் கனமழை பெய்து வருகிறது. மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளும் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, மழை தொடங்கிய முதல் நாளில் இருந்து இதுவரை மழை தொடர்பான சம்பவங்களால் 16 பேர் உயிரிழந்தனர்.

இது குறித்த மகாராஷ்டிர அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில், ‘புனேவில் மூன்று பேர் உயிரிழந்தனர். தானே, லத்தூர் மற்றும் பாந்தராவில் தலா இரண்டு பேர் உயிரிழந்தனர். ராய்காட், அகில்யாநகர், நாக்பூர், வர்தா, சந்தர்பூர், மும்பை புறநகர், கோண்டியா மாவட்டங்களில் தலா ஒரு உயிரிழப்பு பதிவாகியுள்ளது.

**30-05-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** புதிய தகவல்கள் மூலம் உற்சாகம் பிறக்கும். மனையாளின் ஒத்துழைப்பு மன மகிழ்ச்சி தரும். புதிய உத்தியோக வாய்ப்புகள் ஏற்பட, வாழ்க்கையில் மன மகிழ்ச்சி பெருகும்.

**ரிஷபம்:-** சுக சௌக்கியத்திற்கு பங்கம் விளையும். எதிர்பார்த்த இனங்களில் பணவரவு தாமதப்படும். எதையும் சாதிக்கும் திறமை பெறுவீர்கள். செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:-** தனவரவு தாராளமாக இருக்கும். நினைத்த காரியங்கள் நினைத்தது போல் நடக்கும். புத்தி சாதுர்யம் மற்றும் வாக்குவன்மையால் பொருளாதார நிலை மேம்படும்.

**கடகம்:-** தொழில் புரிவோருக்கு வீண் செலவுகள் மற்றும், பணமுடையும் தவிர்க்க முடியாதது. உண்ணவும் நேரமின்றி உழைப்பு அதிகமாகும். நேர் வழியில் பணம் சம்பாதித்தால், நிம்மதி பிறக்கும்.

**சிம்மம்:-** தொழில், வியாபாரம் சம்பந்தமாக பெரியவர்கள் சந்திப்பு இனிதாக அமையும். எண்ணியபடி எண்ணிய காரியங்கள் ஏற்றம் தரும். பெண்களால் நன்மை உண்டாகும்.

**கன்னி:-** புதிய வேலை வாய்ப்புகள், பதவி உயர்வு, வருமான உயர்வு ஆகியவற்றை எதிர்பார்க்கலாம். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். புகழ் ஓங்கும். விருப்பங்கள் நிறைவேறும்.

**துலாம்:-** இரவும் பகலும் போல் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். புண்ணிய காரியங்களில் ஈடுபாடு ஏற்படும். தெய்வ நம்பிக்கையால் புதுத்தெம்பு ஏற்படும். உல்லாசப் பயணங்கள் உற்சாகம் தரும்.

**விருச்சிகம்:-** எந்த விஷயத்திலும் நியாயமாக நடக்க வேண்டிய நாள். மனைவியின் கலகத்தால், பிறரிடம் பகை ஏற்படும். அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் அனுகூலங்கள் பெறலாம்.

**தனுசு:-** பணவரவால் மனம் பரவசப்படும். ஆடை ஆபரணங்கள் சேரும். காதல் உறவால் கவலைகளை மறந்து களிப்படைவீர்கள். அரசாங்க உதவிகள் தடையின்றி கிடைக்கும்.

**மகரம்:-** தனவரவு கூடும். எதிரிகள் பணிவர். எதிர்ப்புகள் குறையும். நண்பர்கள் உதவி நன்மை பயக்கும். எண்ணிய எண்ணியாங்கு நடக்கும். பெயரும் புகழும் ஓங்கும்.

**கும்பம்:-** பயணங்களில் கவனம் தேவை. முழு திறமையுடன் செயல்பட்டாலும் உங்கள் செயல்கள் பாராட்டுப் பெறாது. கவனமாகப் படித்து கல்வியில் வெற்றிகளைக் குவிக்கும் நிலை ஏற்படும்.

**மீனம்:-** தாயின் ஆரோக்கியத்தில் தனிக் கவனம் தேவை. தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். முயற்சி செய்து முன்னேற முயலுங்கள். வெற்றி உங்கள் பக்கம்.

### அமெரிக்காவில் பயிலும்
# சீன மாணவர்களுக்கு டிரம்ப் நிர்வாகம் புதிய நெருக்கடி

**வாஷிங்டன், மே 30-**

அமெரிக்காவில் பயிலும் சீன மாணவர்களுக்கு அதிபர் டிரம்ப் நிர்வாகம் புதிய நெருக்கடியை அளித்துள்ளது.

அமெரிக்காவில் இந்தியாவுக்கு அடுத்தபடியாக சீன மாணவர்கள் தான் அதிகம் பயின்று வருகின்றனர். கடந்த 2023-24 ம் ஆண்டு கல்வியாண்டில் மட்டும் சுமார் 2 லட்சத்து 70 ஆயிரம் சீன மாணவர்கள் அமெரிக்காவில் பயின்று வருகின்றனர். அங்கு பயிலும் வெளிநாட்டு மாணவர்களில் 4ல் ஒரு பங்கு சீன மாணவர்கள் என சொல்லும் அளவிற்கு அதிக எண்ணையில் பயின்று வருகின்றனர்.


இந்த நிலையில், சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு கொண்டவர்கள் சீன மாணவர்களுக்கான விசாக்களை ரத்து செய்ய முடிவு செய்துள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரி மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார். மேலும், வெளிநாட்டு மாணவர்களுக்கான விசா நடைமுறைகளை இன்னும் கடினமாக்க பரிசீலனை செய்யுமாறும் அறிவுறுத்தியுள்ளார். ஏற்கனவே டிரம்ப் நிர்வாகம் ஹார்வர்டு பல்கலைக்கழகம் மீது கெடுபிடிகளை அதிகரித்து வரக்கூடிய சூழலில், தற்போது சீன மாணவர்களுக்கான நெருக்கடி அதிகரித்துள்ளது.

**மரம் மனிதனின் உரம்**

# விரைவில் ஆக்கிரமிப்பு காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாகும்: ராஜ்நாத் சிங் தகவல்

புதுடெல்லி, மே 30-

விரைவில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாக மாறும் என மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.



பஹல்காமில் கடந்த ஏப்.22-ம் தேதி நடந்த பயங்கரவாத தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடியாக, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மீது இந்திய ராணுவம் ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் தாக்குதலை நடத்தியது. இந்த சம்பவத்திற்கு பின்பு, இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே போர் பதற்ற சூழல் உருவானது. 4 நாட்களுக்கு பின்னர் இரு நாடுகளும் போர் நிறுத்த முடிவுக்கு வந்தன.

இந்த நிலையில், டெல்லியில் நேற்று நடந்த இந்திய தொழில் கூட்டமைப்பின் (சி.ஐ.ஐ.) வருடாந்திர தொழில் உச்சி மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியில் மத்திய பாதுகாப்பு துறை மந்திரி ராஜ்நாத் சிங் உரையாற்றும்போது, நம்முடைய நாட்டின் பாதுகாப்பில் மேக்-இன்-இந்தியா அத்தியாவசியம் வாய்ந்த ஒரு திட்டம் ஆகும். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது, பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் திறமையான நடவடிக்கையில் அது ஒரு முக்கிய பங்காற்றியது என பேசினார். இதேபோன்று, ஏ.எம்.சி.ஏ. திட்டத்தின் செயல் மாதிரி வழியே, உள்நாட்டு பாதுகாப்பு திறனை இன்னும் மேம்படுத்துவது பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசும்போது, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி என தெளிவுப்படுத்திய சிங், நிலப்பகுதி மற்றும் அரசியல் ரீதியாக அந்த மக்கள் பிரிந்திருந்தபோதும், விரைவிலோ அல்லது பின்னரோ, அவர்களாகவே விரும்பி இந்தியாவுக்கு திரும்புவார்கள் என்றும் பேசியுள்ளார். அவர்கள், இந்தியாவுடன் ஆழ்ந்ததொரு பிணைப்பை கொண்டிருக்கிறார்கள். ஒரு சிலரே தவறாக வழிநடத்தி கொண்டிருக்கிறார்கள் என்று கூறியுள்ளார். பாகிஸ்தானுடன் இனி பயங்கரவாதம் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் ஆகியவை பற்றி மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று தெளிவுப்படுத்தினார்.

# அன்பாக, இனிமையாக பழகக்கூடியவர் நடிகர் ராஜேஷ்: இ.பி.எஸ். புகழஞ்சலி

சென்னை, மே 30-

அனைவரிடத்திலும் அன்பாகவும், இனிமையாகவும் பழகக்கூடியவர் நடிகர் ராஜேஷ் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: பிரபல திரைப்பட குணச்சித்திர நடிகர் ராஜேஷ் மாரடைப்பால் மரணமடைந்து விட்டார் என்ற செய்தி கேட்டு வருத்தமுற்றேன். நடிகர் ராஜேஷ் 'கன்னிப் பருவத்திலே', 'பயணங்கள் முடிவதில்லை' 'அச்சமில்லை அச்சமில்லை', 'நிலவே மலரே' உள்ளிட்ட 150-க்கும் மேற்பட்ட திரைப்படங்களிலும், சின்னத் திரை தொடர்களிலும் நடித்து மக்களின் பாராட்டையும், பேரன்பையும் பெற்றவர்.

அனைவரிடத்திலும் அன்பாகவும், இனிமையாகவும் பழகக்கூடிய அன்புச் சகோதரர் நடிகர் ராஜேஷை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், திரைப்படத் துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# குற்றால அருவிகளில் குளிக்க 5-வது நாளாக தடை நீட்டிப்பு

தென்காசி, மே 30-

தென்மேற்கு பருவமழை முன்கூட்டியே தொடங்கிய நிலையில், தமிழகத்தில் தென்காசி, நெல்லை உள்ளிட்ட மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் மலையடிவார பகுதிகளில் கனமழை பெய்தது. 4 நாட்களுக்கு முன்னர் இரவில் குற்றாலத்தில் அனைத்து அருவிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது.

தொடர்ந்து நேற்று முன்தினம் காலையிலும் குற்றாலம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் மிதமான மழை விட்டு விட்டு பெய்தது. மேற்கு தொடர்ச்சி மலையிலும் தொடர் மழை பெய்ததால் அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. மெயின் அருவியில் பாதுகாப்பு ஆர்ச்சை தாண்டி தண்ணீர் ஆர்ப்பரித்து விழுந்தது. ஐந்தருவியில் அனைத்து கிளைகளையும் மூழ்கடித்தவாறு தண்ணீர் சீறிப்பாய்ந்து சென்றது. பழைய குற்றாலம், சிற்றருவி, புலியருவியிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. எனவே அனைத்து அருவிகளிலும் சுற்றுலா பயணிகள் குளிக்க விதிக்கப்பட்ட தடை நீட்டிக்கப்பட்டது.

இந்த நிலையில் தொடர் கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக சுற்றுலா பயணிகள் குற்றால அருவிகளில் குளிக்க, நேற்று 5வது நாளாக தடையை தென்காசி மாவட்ட நிர்வாக நீட்டித்துள்ளது.

# எவரெஸ்ட் சிகரம் ஏறிய சிறுமி: துணை முதல்வர் நேரில் பாராட்டு

சென்னை, மே 30-



எவரெஸ்ட் சிகரம் ஏறிய நெல்லை சிறுமிக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு தெரிவித்தார்.

எவரஸ்ட் சிகரத்தில் 5,364 மீட்டர் உயரத்திற்கு மலையேற்றம் மேற்கொண்டு அடிவார முகாமை அடைந்த திருநெல்வேலியைச் சேர்ந்த பள்ளி மாணவி லலித் ரேணு ஸ்ரீதர் வெங்கடேஷ், நேற்று தலைமைச் செயலகத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த 6 வயது பள்ளி மாணவி லலித் ரேணு ஸ்ரீதர் வெங்கடேஷ், தனது தந்தை ஸ்ரீதர் வெங்கடேஷ் உடன் சேர்ந்து மலையேற்றத்தில் ஆர்வம் கொண்டு மலையேற்ற பயிற்சி பெற்று வருகிறார். அவர் 6,000 அடி உயரம் உடைய வெள்ளியங்கிரி மலை முதல் 30க்கும் மேற்பட்ட பல்வேறு மலைகளில் மலையேற்றம் மேற்கொண்டுள்ளார். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மலையேற்றத்தில் ஆர்வம் கொண்டுள்ள பள்ளி மாணவி லலித் ரேணு ஸ்ரீதர் வெங்கடேஷை பாராட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கேடயத்தை வழங்கி, மேலும் தொடர்ந்து பல சாதனைகளை படைக்க வாழ்த்து தெரிவித்தார்.

# கனிமொழி எம்.பி. குழுனர் கிரீஸ் அமைச்சருடன் சந்திப்பு

## ஆபரேஷன் சிந்தூர் குறித்து எடுத்துரைத்தனர்

ஏதென்ஸ், மே 30-

கனிமொழி எம்.பி. தலைமையிலான குழுவினர் கிரீஸ் அமைச்சரை சந்தித்து பேசினார்.



பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து பாகிஸ்தானின் பயங்கரவாத ஆதரவை உலகுக்கு அம்பலப்படுத்தவும், 'ஆபரேஷன் சிந்தூர்' போன்ற இந்தியாவின் தற்காப்பு உரிமையை எடுத்துரைக்கவும் சர்வதேச நாடுகளுக்கு இந்திய பிரதிநிதிகள் சென்றுள்ளனர்.

இதற்காக அமைக்கப்பட்டுள்ள 7 அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுவில், தி.மு.க. எம்.பி. கனிமொழி தலைமையிலான குழுவும் ஒன்று. இந்நிலையில் இந்த குழுவினர் ரஷியா, சுலோவேனியா உள்ளிட்ட நாடுகளில் தங்கள் பணியை முடித்துக்கொண்டு கிரீஸ் நாட்டை அடைந்தனர். தலைநகர் ஏதென்ஸ் நகரில் நேற்று முன்தினம் அந்த நாட்டு வெளியுறவுத்துறை துணை மந்திரி டாசோஸ் சட்ஜிவாஸ்லியோவை சந்தித்து பேசினர்.

மேலும் பாதுகாப்பு மற்றும் வெளியுறவு தொடர்பான நாடாளுமன்றக் குழு மற்றும் கிரீஸ்-இந்தியா நட்புறவுக்குழுவையும் சந்தித்தனர். அப்போது இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் தொடர்ந்து நடத்தி வரும் பயங்கரவாத தாக்குதல்கள், அந்த நாட்டின் பயங்கரவாத ஆதரவு உள்ளிட்டவற்றை கனிமொழி எம்.பி. குழுவினர் எடுத்துரைத்தனர்.

இது தொடர்பாக கனிமொழி எம்.பி., செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், "இந்தியா-கிரீஸ் இடையே ஆழமான, நீண்ட கால உறவு உள்ளது. எல்லை தாண்டிய பயங்கரவாதத்தால் இந்தியா எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை நாங்கள் எடுத்துரைத்தோம். ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐ.நா. சபை இந்த விவகாரத்தை கவனத்தில் எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளோம்.

பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டை அவர்கள் புரிந்து கொண்டனர். கிரீஸ் அரசு நம்முடன் நிற்கிறது என்ற உணர்வு ஏற்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

# மாமல்லபுரத்தில் இன்று அதிக மதிப்பெண் எடுத்த 600 மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி கவுரவிக்கிறார் த.வெ.க. தலைவர் விஜய்

மாமல்லபுரம், மே 30-



மாமல்லபுரத்தில் இன்று அதிக மதிப்பெண் எடுத்த 600 மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி த.வெ.க. தலைவர் விஜய் கவுரவிக்கிறார்.

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் மாணவ, மாணவிகளின் கல்வி ஆர்வத்தை மேம்படுத்தும் வகையில் கடந்த 2 ஆண்டுகளாக 10, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் சாதனை படைத்த மாணவ, மாணவிகளுக்கு பரிசு வழங்கி கவுரவித்து வருகிறார். விஜய்யின் இந்த திட்டம் மாணவ, மாணவிகளிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு கல்வி ஆர்வத்தை தூண்டி வருகிறது. விஜய் கையினால் பரிசு பெற வேண்டும் என்ற நோக்கத்தில் மாணவ, மாணவிகள் பலர் நன்றாக படித்து அதிக மதிப்பெண் பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் 2025-ம் ஆண்டு கல்வி விருது வழங்கும் விழா இன்று காலை 9 மணி முதல் மாமல்லபுரத்தில் உள்ள 4 பாயிண்ட்ஸ் ஷெரட்டன் ஓட்டலில் நடக்கிறது. விழாவுக்கான ஏற்பாடுகளை கட்சி தலைவர் விஜய் உத்தரவுப்படி பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் சிறப்பாக செய்து வருகிறார்.

பரிசளிப்பு விழாவில் சென்னை, அரியலூர், கடலூர், கள்ளக்குறிச்சி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம், சிவகங்கை, செங்கல்பட்டு, திண்டுக்கல், திருவள்ளூர், தேனி, நாகப்பட்டினம், புதுக்கோட்டை பெரம்ப லூர், வேலூர் மாவட்டங்களுக்கு உட்பட்ட 88 தொகுதிகளில் உள்ள மாணவ, மாணவிகள் 600 பேர் பங்கேற்கின்றனர். எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ் 2 தேர்வில் முதல் 3 இடத்தை பிடித்த மாணவ, மாணவிகளும், மாநில அளவில் முதலிடத்தை பெற்ற மாணவ, மாணவிகளும் மற்றும் அதிக மதிப்பெண் பெற்ற மாற்றுத் திறனாளிகள், வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள மாணவ, மாணவிகளும் தங்களது பெற்றோருடன் பங்கேற்க இருக்கின்றனர். விழாவில் சுமார் 2000 பேர் பங்கேற்க இருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது.

விழாவுக்கு வெளி மாவட்டங்களில் இருந்து வரும் மாணவ, மாணவிகள் குளித்து விட்டு தயாராகி வருவதற்கு மாமல்லபுரத்தில் முகுந்தன் மகால் என்ற திருமண மண்டபம் ஒதுக்கப்பட்டு உள்ளது. அதில் பொறுப்பாளர்களாக ராஜேஷ், சபரி என்ற நிர்வாகிகள் நியமனம் செய்யப்பட்டு உள்ளனர்.

தென் மாவட்டத்தில் இருந்து வரும் மாணவ, மாணவிகள் மேல்மருவத்தூர், மதுராந்தகம், செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் வந்து கிழக்கு கடற்கரை சாலை வழியாக மாமல்லபுரம் 4 பாயிண்ட்ஸ் ஷெரட்டன் ஓட்டலுக்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டு உள்ளனர். விழாவுக்கு வரும் மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்களுக்கு தனி அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு உள்ளன. விழா அரங்கிற்குள் செல்போன், பேப்பர், பேனா மற்றும் இதர பொருட்கள் கொண்டு வர அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது.

இன்று காலை சரியாக 9 மணிக்கு விழா தொடங்க இருக்கிறது. தமிழ்தாய் வாழ்த்துடன் விழா தொடங்குகிறது. தொடர்ந்து மாணவ-மாணவிகளின் கல்வி ஆர்வத்தை ஊக்கப்படுத்தி த.வெ.க. தலைவர் விஜய் சிறப்புரையாற்றுகிறார். இதைத் தொடர்ந்து மாநில அளவில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு வைரக் கம்மல் அல்லது வைர மோதிரம் கடந்த ஆண்டை போல் இந்த ஆண்டும் விஜய் பரிசு வழங்கி கவுரவிக்க இருப்பதாக கூறப்படுகிறது.

அடுத்ததாக தொகுதிவாரியாக முதல் 3 இடங்களை பிடித்த மாணவ, மாணவிகளுக்கு தங்க நாணயம், கல்வி ஊக்க தொகை, விருதுகளை வழங்கி மாணவ, மாணவிகளுடன் விஜய் புகைப்படம் எடுத்துக் கொள்கிறார். பரிசு பெற இருக்கும் 600 மாணவ, மாணவிகளுக்கும் விஜய் நேரில் பரிசு வழங்கி உற்சாகப்படுத்த இருக்கிறார். விழாவில் பங்கேற்கும் அனைவருக்கும் மதியம் 21 வகையான அறுசுவை உணவுகள் வழங்கப்பட இருக்கிறது.

பரிசளிப்பு விழாவை தொடர்ந்து மாமல்லபுரம் நகரம் இப்போதே விழாக்கோலம் பூண்டு உள்ளது. விழா நடைபெறும் இடத்தின் நுழைவு வாயில் வாழை மற்றும் பல்வேறு தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு உள்ளது. விழாவில் பங்கேற்க வரும் த.வெ.க. தலைவர் விஜய்க்கு மேளதாளங்கள், நாட்டுப்புற கலைஞர்கள், செண்டை மேளத்துடன் பிரமாண்ட வரவேற்பு கொடுக்கப்பட இருக்கிறது. 2-ம் கட்ட பரிசளிப்பு விழா அடுத்த வாரமும், 3-ம் கட்ட பரிசளிப்பு விழா அதற்கடுத்த வாரமும் நடக்கிறது.

# பா.ம.க. இளைஞர் சங்க தலைவர் பொறுப்பில் இருந்து முகுந்தன் விலகல்

சென்னை, மே 30-

பா.ம.க. இளைஞர் சங்க தலைவர் பொறுப்பில் இருந்து விலகுவதாக முகுந்தன் அறிவித்துள்ளார். ராமதாஸ் குலதெய்வம் என்றும் அன்புமணி எதிர்காலம் எனவும் தனது கடிதத்தில் கூறியுள்ளார்.பா.ம.க. பொறுப்பில் இருந்து விலகும் கடிதத்தை அன்புமணிக்கு முகுந்தன் அனுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பாட்டாளி இளைஞர் சங்கத் தலைவர் பொறுப்பிலிருந்து விலகுதல் தொடர்பாக பாட்டாளி மக்கள் கட்சியின் இளைஞரணியான பாட்டாளி இளைஞர் சங்கத்தின் தலைவராக கடந்த 28.12.2024 ஆம் நாளில் நான் நியமிக்கப்பட்டேன்.

சொந்த காரணங்களுக்காக அந்தப் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்கிறேன். ராமதாஸ் தான் என்றென்றும் எனது குலதெய்வம், அன்புமணி ராமதாஸ் ஆகிய தாங்கள் தான் எங்கள் எதிர்காலம் என்ற உணர்வுடன் தொடர்ந்து கட்சிப் பணியாற்றுவேன் என்று உறுதியளிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# கட்சியை விட்டே நீக்குவேன்: அன்புமணி மீது ராமதாஸ் அடுக்கடுக்காக குற்றச்சாட்டு

விழுப்புரம், மே 30-

அன்புமணி மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்த பா.ம.க. நிறுவனர் ராமதாஸ், தேவைப்பட்டால் பொதுக்குழுவைக் கூட்டி அன்புமணியை கட்சியை விட்டே நீக்குவேன் என்று தெரிவித்துள்ளார்.

பா.ம.க.வின் நிறுவனர் ராமதாஸ் தைலாபுரம் தோட்டத்தில் நேற்று (மே.29) செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: அன்புமணியை அவரது 35 வயதில் நான் அமைச்சராக்கினேன். நான் செய்து கொடுத்த சத்தியத்தை மீறி அவரை அமைச்சராக்கியது எனது தவறு.

தருமபுரியில் நடந்த கூட்டமொன்றில் அன்புமணி பேசியதை பார்த்திருப்பீர்கள், நானும் கேட்டேன். அந்தப் பேச்சில், "நான் என்ன தவறு செய்தேன், ஏன் பதவி நீக்கம் என்று." அன்புமணி கேட்டிருந்தார். அது கட்சிக் காரர்களையும் மக்களையும் திசை திருப்பும் முயற்சி. என்னைக் குற்றவாளியாக்கி அன்புமணி அனுதாபம் தேட முயற்சித்துள்ளார்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடோடு பயணித்தக் கட்சியில் அவர் கலகத்தை உண்டாக்கினார். வளர்த்த கிடா மார்பில் பாய்ந்துள்ளது. கட்சி வளர்ச்சிக்கு தடையாக இருந்து பல இன்னல்களைச் செய்தவர் அன்புமணி. பா.ம.க. என்னும் ஆளுயுர கண்ணாடியை நொடியில் உடைத்தது யார்? குருவை, அன்புமணி கீழ்த்தரமாக நடத்தினார். பெற்ற தாயை பாட்டிலை வீசித்தாக்க முயன்றவர் அன்புமணி. பா.ம.க.வை வளர்த்தது யார்? கூசாமல் பொய் சொல்பவர் அன்புமணி. நான் கூட்டிய மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்துக்கு செல்ல வேண்டாம் என்று 108 பேருக்கு அவரே கூறியுள்ளார்.

2024 தேர்தலின் போது பா.ஜ.க.வுடன் கூட்டணி வேண்டுமென்று அமைத்தார் அன்புமணி. நான் அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைக்கலாம் என்று கூறினேன். அ.தி.மு.க.வும், பா.ம.க.வும் இயல்பான கூட்டணி. 2024-ல் இந்தக் கூட்டணி அமைந்திருந்தால் பா.ம.க. - 3 இடங்களிலும், அ.தி.மு.க.வும் 6, 7 இடங்களிலும் வென்றிருக்கும். பா.ஜ.க. கூட்டணிக்காக அன்புமணியும், சவுமியாவும் என் கால்களைப் பிடித்து அழுதனர். அந்தக் கூட்டணிக்கான ஏற்பாட்டை சவுமியா செய்தார். தேவைப்பட்டால் பொதுக்குழுவைக் கூட்டி அன்புமணியை கட்சியை விட்டு நீக்குவேன். இவ்வாறு ராமதாஸ் பேசினார்.

# பாக்.கிற்கு உளவு பார்த்ததாக சந்தேகம்: ராஜஸ்தானில் அரசு ஊழியர் கைது

ஜெய்ப்பூர், மே 30-

ராஜஸ்தான் அரசு ஊழியர் பாகிஸ்தானுக்கு உளவு பார்த்தாரா என்ற சந்தேகத்தில் போலீசார் அவரை கைது செய்தனர்.

பாகிஸ்தானுக்கு உளவு பார்த்ததாக சந்தேகத்தின் பேரில் ராஜஸ்தான் மாநில அரசு ஊழியர் ஷாகுர் கான் என்பவர் ஜெய்சால்மரில் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட ஷாகுர் ஜெய்சால்மர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலை பார்த்து வந்தார். இஸ்லாமாபாத்துடன் தொடர்புடைய தொலைபேசி எண்கள் கானின் மொபைல் போனில் இருந்ததைத் தொடர்ந்து அவர் பாகிஸ்தானுக்காக உளவு பாத்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்தது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், "ஷாகுர் கான் பாகிஸ்தானுக்காக உளவு பார்த்திருக்கலாம் என்று தகவல்கள் கிடைத்தன. இதனைத் தொடர்ந்து அவர் கண்காணிப்பில் இருந்தார். அவர் நேற்றிரவு கைது செய்யப்பட்டார்" என்றனர்.

ஷாகுர் கான் கைது செய்யப்பட்டத்தைத் தொடர்ந்து அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பின்பு உளவுத் துறை அவரை ஜெய்ப்பூருக்கு அழைத்துச் சென்றது. விசாரணையின் போது, தனது மொபைலில் இருந்த இஸ்லாமாபாத் தொடர்பான எண்கள் குறித்து விளக்க கான் தவறிவிட்டார். என்றாலும் கடந்த காலங்களில் 6-7 முறை இஸ்லாமாபாத் சென்று வந்ததாக அவர் ஒப்புக்கொண்டார்.பாகிஸ்தானுக்காக உளவு பார்த்ததாக சிஆர்பிஎஃப் வீரர் ஒருவரை தேசிய புலனாய்வு முகமை கைது செய்த சில நாட்களுக்கு பின்பு இந்த ராஜஸ்தான் அரசு ஊழியர் கைது சம்பவம் நடந்துள்ளது கவனிக்கத்தக்கது.

# சரக்கு கப்பல் மூழ்கிய விவகாரம்; பேரிடராக அறிவித்தது கேரள அரசு

கொச்சி, மே 30-

சரக்கு கப்பல் மூழ்கிய விவகாரத்தை பேரிடராக கேரள அரசு அறிவித்துள்ளது. சர்வதேச கடல்வழி சட்டங்களின் கீழ் இழப்பீடு தரப்பட வேண்டும் என மத்திய தரைக் கடல் கப்பல் நிறுவனத்திடம் கேரள அரசு தெரிவித்து உள்ளது.

கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகில் உள்ள விழிஞ்சம் துறைமுகத்தில் இருந்து கொச்சிக்கு கடலில் சரக்கு கப்பல் ஒன்று சென்று கொண்டு இருந்தது. இந்த கப்பலில் உள்ள கண்டெய்னர்களில் ரசாயனம் இருந்தன. இதற்கிடையே தென்மேற்கு பருவ மழை தொடக்கத்தின் எதிரொலியாக, அரபிக்கடலில் பலத்த காற்று வீசியது.

இதன் தொடர்ச்சியாக கொச்சி அருகே நடுக்கடலில் சரக்கு கப்பல் சென்றபோது திடீரென்று கவிழ்ந்தது. நல்ல வேளையாக மூழ்காமல் சாய்ந்த நிலையில் நின்றது. மேலும் சரக்கு கப்பலில் ரசாயனம் இருந்த கன்டெய்னர்கள் கடலுக்குள் விழுந்தன. இந்த கப்பலில் மாலுமிகள் உள்பட 24 பேர் பணியில் இருந்தனர். இவர்கள் அனைவரும் மீட்கப்பட்டனர்.

கடலில் ரசாயனம் கொட்டியதும், அப்பகுதி ஆபத்து பகுதியாக அறிவிக்கப்பட்டதுடன், இதுதொடர்பாக கடலோர பகுதி மக்களுக்கும், மீனவர்களுக்கும் பாதுகாப்பு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. கப்பலில் அனைத்து ஊழியர்களும் காப்பாற்றப்பட்ட நிலையில், கடந்த 25-ந்தேதி கப்பல் முழுமையாக கடலில் மூழ்கியது. சரக்கு கப்பலில் இருக்கும் 640 கண்டெய்னர்களில், 13 கண்டெய்னர்களில் மிக ஆபத்தான பொருட்கள் உள்ளன. இதனால், காவல் துறையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், கப்பலில் இருந்த கண்டெய்னரில் இருந்து, ரசாயன பொருட்கள் கடலில் கலக்க தொடங்கியுள்ளன. இதனால், கேரள அரசு இதனை பேரிடராக அறிவித்து உள்ளது. கப்பலில், 12 கண்டெய்னரில் கால்சியம் கார்பைடு என்ற ரசாயன பொருட்கள் உள்ளன. வெடிக்க கூடிய எண்ணெய் மற்றும் எரிவாயு ஆகியனவும் உள்ளன. இதனால், முன்னெச்சரிக்கை நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. இதே போன்று, சர்வதேச கடல்வழி சட்டங்களின் கீழ் இழப்பீடு தரப்பட வேண்டும் என மத்திய தரைக்கடல் கப்பல் நிறுவனத்திடம் கேரளா முறைப்படி தெரிவித்தது உள்ளது.

# காஷ்மீரில் பயங்கரவாதிகள் 2 கைது

ஸ்ரீநகர், மே 30-

ஜம்மு காஷ்மீரில் லஷ்கர் இ தொய்பாவுடன் தொடர்பில் இருந்த இரு பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து ஏராளமான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பஹல்காம் தாக்குதலுக்கு பின்னர் ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்பு படையினர் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ரோந்து பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இந் நிலையில், சோபியான் மாவட்டத்தில் பஸ்குச்சான் என்ற பகுதியில் நடைபெற்ற அதிரடி சோதனையில் லஷ்கர் இ தொய்பாவுடன் தொடர்பில் இருந்த பயங்கரவாதிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து ஏராளமான துப்பாக்கிகள், குண்டுகள் உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்துள்ளனர். ராணுவம் மற்றும் போலீசார் நடத்திய கூட்டு தேடுதல் நடவடிக்கையில் இருவரும் சிக்கி இருக்கின்றனர். அவர்களுடன் வேறு யாரும் அதே பகுதியில் பதுங்கி இருக்கின்றனரா என்றும் தீவிர தேடுதல் வேட்டையில் இறங்கி உள்ளனர்.

# ராஜேஷ் அருமையான மனிதர்: நடிகர் ரஜினிகாந்த் புகழஞ்சலி

சென்னை, மே 30-

எனது நண்பர் ராஜேஷ் அருமையான மனிதர் என்று நடிகர் ரஜினிகாந்த் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

என்னுடைய நெருங்கிய நண்பர், நடிகர் ராஜேஷின் அகால மரணச் செய்தி எனக்கு அதிர்ச்சியளிக்கிறது. என நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், என்னுடைய நெருங்கிய நண்பர், நடிகர் ராஜேஷின் அகால மரணச் செய்தி எனக்கு அதிர்ச்சியளிக்கிறது. மிகுந்த மன வேதனையைத் தருகிறது. அருமையான மனிதர், அவருடைய ஆத்மா சாந்தியடையட்டும். அவருடைய குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்கள். எனத் தெரிவித்துள்ளார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....




அவசரநிலையின் 50-ம் ஆண்டு நிறைவு நாளில், பஹல்காம் தாக்குதல் குறித்த பாராளுமன்ற சிறப்புக் கூட்டத்தை நடத்த மோடி தலைமையிலான மத்திய பா.ஜ.க. அரசு திட்டமிட்டுள்ளது. பஹல்காம் தாக்குதல் பயங்கரவாதிகள் இன்னும் தலைமறைவாக இருக்கிறார்கள். அதையெல்லாம் திசைதிருப்பவே இந்தத் திட்டம்.

- ஜெய்ராம் ரமேஷ்




தமிழைவிட கன்னடம்தான் மூத்த மொழி என்பதற்கான வரலாற்று ஆதாரங்களை, இலக்கியச் சான்றுகளை தந்து அறவழியில் மறுக்க வேண்டும். அதையெல்லாம் விடுத்து, அண்ணன் கமல்ஹாசனை கர்நாடகாவில் நுழைய விடமாட்டோம், அவரது படங்களைத் திரையிட அனுமதிக்கமாட்டோம் என்பது என்ன மாதிரியான அணுகுமுறை?

- சீமான்



இந்தியாவைத் தாக்க நினைக்கும் தீவிரவாதிகள் அதற்கான பலனை அனுபவிக்க நேரிடும். ஆபரேஷன் சிந்தூர் மூலம் பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு தகுந்த பாடம் கற்பித்து விட்டோம். இந்தியாவைத் தாக்கலாம் என்று நினைக்கும் தீவிரவாதிகள், அதற்கான பதிலடியைப் பெற நேரிடும் என்பதை இந்த ஆபரேஷன் சிந்தூர் மூலம் உணர்த்தியுள்ளோம்.

- சசி தரூர்



தே.மு.தி.க.விற்கு மாநிலங்களவை உறுப்பினர் பதவியை வழங்குவது அ.தி.மு.க.வின் கடமை. இது ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது தான். பொறுத்தவர் பூமி ஆள்வார்கள். நாங்கள் பதற்றமின்றி தெளிவாக உள்ளோம். மாநிலங்களவை சீட் கொடுக்கவில்லையென்றால் பின்னர் பார்த்துக்கொள்ளலாம்.

- பிரேமலதா



சென்னை காளிகாம்பாள் திருக்கோயிலில் புதுப்பிக்கப்பட்ட வெள்ளித்தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. அமைச்சர் சேகர்பாபு தேரோட்டத்தை தொடங்கி வைத்தார்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி வட்டத்திற்கு உட்பட்ட மத்தூர் கிராமத்தில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறையின் சார்பில் விவசாயி இயற்கை முறையில் பழச்செடி சாகுபடி செய்யப்பட்ட பரப்பினை கலெக்டர் மு.பிரதாப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் தோட்டக்கலை துணை இயக்குநர் ஐ. ஜெபக்குமாரி அனி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

## கஞ்சா கடத்தல் வழக்கு: கூலிப்படை தலைவனுக்கு 10 ஆண்டு சிறை தண்டனை

**சென்னை மே 30-**

கஞ்சா கடத்தல் வழக்கில் கூலிப்படை தலைவன் உள்பட மூவருக்கு தலா 10 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. வெளிமா நிலத்திலிருந்து சொகுசு காரில் மதுரைக்கு கஞ்சா கடத்தி விற்பனை செய்யப்படுவதாக கீரைத்துறை போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து போலீசார் கடந்த 2021ம் ஆண்டு மதுரை சிந்தாமணி சாலையில் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியாக வந்த சொகுசு காரை நிறுத்தி சோதனையிட்டனர். அப்போது காரில் 28 கிலோ கஞ்சா கடத்தி வந்தது தெரியவந்தது. கஞ்சா கடத்தி வந்த, சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தை சேர்ந்த கூலிப்படை தலைவன் லோடு முருகன் (42), மதுரை அனுப்பானடி பகுதியை சேர்ந்த ரவிக்குமார் (32), மதுரை அண்ணாநகரை சேர்ந்த சதியேந்திரன் ஆகியோரை போலீசார் கைது செய்தனர்.

கஞ்சா கடத்தலுக்கு பயன்படுத்திய சொகுசு கார், டூவீலர், பணம் ரூ.10 ஆயிரம், 2 கத்திகள் உள்ளிட்டவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர்.இந்த வழக்கின் விசாரணை மதுரை மாவட்ட முதன்மை போதைப்பொருள் தடுப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது. அரசு தரப்பில் வக்கீல் தங்கேஸ்வரன் ஆஜரானார். இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி எம்.செங்கமலச்செல்வன் நேற்று தீர்ப்பளித்தார். அதில் கஞ்சா கடத்தியது உறுதியானதால் லோடு முருகன், ரவிக்குமார், சதியேந்திரன் ஆகிய மூவருக்கும் 10 ஆண்டுகள் சிறை மற்றும் தலா ரூ.1 லட்சம் அபராதம் விதித்து உத்தரவிட்டார்.

## ஓட்டேரி பகுதியில் திருநங்கைக்கு கத்திக்குத்து: 2 பேர் கைது

**சென்னை மே 30-**

ஓட்டேரி, எஸ்.வி.எம். நகர், கே. பிளாக்கில் விந்தியா, என்ற திருநங்கை, அவரது வளர்ப்பு தாயான அறிவழகன் (எ) கீதா என்ற திருநங்கையுடன் அறிவழகன் (எ) கீதா வசித்து வருகிறார்.

அப்குதியைச் சேர்ந்த பிரசாந்த் (எ) குள்ள கருப்பா ஆகியோர் பழகி வந்த நிலையில், பிரசாந்த் அடிக்கடி அறிவழகன் (எ) கீதாவிடம் பணம் கேட்டு வாங்கி செல்வார். சமீப காலமாக அறிவழகன் (எ) கீதா, பிரசாந்திடம் பேசாமலும், அவருக்கு பணம் கொடுக்காமலும் வந்த நிலையில், அடிக்கடி பிரசாந்த் அடிக்கடி அறிவழகன் (எ) கீதா வீட்டிற்கு சென்று பணம் கேட்டு மிரட்டி வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த 27.ந் தேதி அன்று நள்ளிரவு பிரசாந்த் மற்றும் அவரது நண்பர் மோகன்பாபு (எ) ஜாய் ஆகியோர் அறிவழகன் (எ) கீதாவின் வீட்டிற்கு சென்று அவரை தகாத வார்த்தைளால் பேசியபோது, விந்தியா ஏன் எனது தாயை திட்டுகிறீர்கள் என கேட்டுள்ளார்.

உடனே இருவரும் விந்தியாவை தகாத வார்த்தைகளால் பேசி, பிரசாந்த் தான் மறைத்து வைத்திருந்த பெரிய கத்தியை எடுத்து விந்தியாவின் தலையில் தாக்கி விட்டு, கொலை மிரட்டல் விடுத்து இருவரும் சென்றனர்.

இரத்தக்காயமடைந்த விந்தியா கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் மேற்படி சம்பவம் குறித்து தலைமைச் செயலக குடியிருப்பு காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், கொலை முயற்சி, திருநங்கை சட்டம் மற்றும் ஆயுத தடை சட்டம் உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

தலைமைச் செயலக குடியிருப்பு காவல் நிலைய காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட 1.பிரசாந்த் (எ) குள்ள கருப்பா, 2.மோகன்பாபு (எ) ஜாய், ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 1 பெரிய கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி பிரசாந்த் (எ) குள்ள கருப்பா G-5 தலைமைச் செயலக குடியிருப்பு காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது 11 குற்ற வழக்குகளும், மோகன்பாபு மீது 2 கொலை முயற்சிகளும் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

## மெரினா கடற்கரை பகுதியில் நண்பர்களுக்குள் மோதல்: 4 பேர் கைது

**சென்னை மே 30-**


சென்னை, சேப்பாக்கம், விக்டோரியா ஹாஸ்டல் பின்புறம் வசித்து வரும் சரவணன், என்பவர் தனியார் அலுவலகத்தில் டீ விற்பனை செய்து வரும் வேலை செய்து வருகிறார். சரவணன் 27.ந் தேதி அன்று இரவு வழக்கம் போல, கண்ணகி சிலை பின்புறமுள்ள கடற்கரை மணற்பரப்பில் தூங்கி கொண்டிருந்த போது, மறு நாள் அதிகாலையில், அவருடன் தூங்கும் 5 நண்பர்கள் சத்தம் போட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது சரவணன் ஏன் இவ்வளவு சத்தம் போடுகிறீர்கள் என கேட்டபோது, 5 நபர்களும் தகாத வார்த்தைகளால் பேசி, அருகிலிருந்த மது பாட்டலால் சரவணனை தாக்கிவிட்டு தப்பிச் சென்றனர். இரத்தக்காயமடைந்த சரவணன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் மேற்படி சம்பவம் குறித்து மெரினா காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

மெரினா காவல் நிலைய காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட 1.மணி, 2.பிரசாந்த், 3.மனோகர், 4.அசோக்குமார், ஆகிய 4 பேரை கைது செய்தனர்.கைது செய்யப்பட்ட எதிரிகள் நால்வரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய முக்கிய தலைமறைவு எதிரியை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்.

## சென்னை தீவுத்திடலில் புதிதாக அமையவுள்ள ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகத்திற்கான பூர்வாங்கப்பணி

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்



**சென்னை மே 30-**

சென்னை, தீவுத்திடல், சத்தியவாணி முத்து நகரில் புதிதாக அமையவுள்ள ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகத்திற்கான பூர்வாங்கப்பணியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுரையின் படி, கூட்டுறவுத்துறையின் சார்பில் 49 அறிவிப்புகள் சட்டமன்றத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பண் அறிவிக்கப்பட்டது. அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன்படி, சென்னை, தீவுத்திடல், சத்தியவாணி முத்து நகரில் 4 தளங்களுடன் 19,464 சதுர அடி பரப்பளவில் ரூ.8கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகம் கட்டப்படவுள்ளது. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகத்தின் தரைத்தளத்தில் இப்பகுதி மக்களுக்காக சென்னை மத்திய கூட்டுறவு வங்கி கிளை, ஏ.டி.எம் மையம், சிறிய பல்பொருள் சிறப்பங்காடியும், முதல் தளத்தில் கூட்டுறவு நிறுவனங்களுக்கான அலுவலகங்களும், இரண்டாம் தளத்தில் சென்னை கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்கான வகுப்பறைகள், மூன்றாம் தளத்தில் சென்னை கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்கான நவீன வகுப்பறைகள் மற்றும் தேவுக்கூடமும், நான்காவது தளத்தில் நவீன வசதிகளுடன் கூடிய கூட்டரங்கம் மற்றும் அவைக்களம் ஆகியன அமையவுள்ளது.

இந்நிகழ்வின் போது, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர்.க.நந்தகுமார், கூடுதல் பதிவாளர்/ மேலாண்மை இயக்குநர் முனைவர். க. சொ.இரவிச்சந்திரன் உட்பட பலர் உடனிருந்தனர்.

## சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் அதிமுக கவுன்சிலர் டி.சத்தியநாதன் கோரிக்கையை ஏற்று டாக்டர் அம்பேத்கர் படம்

**சென்னை,மே.30-**

அதிமுக கவுன்சிலர் மாமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் நெற்குன்றம் டி.சத்தியநாதன் கோரிக்கையை ஏற்று சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் டாக்டர் அம்பேத்கர் படம் வைக்கப்பட்டதற்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார்

சென்னை மாநகராட்சி உள்ள 200 வார்டு உறுப்பினர்களின் மாமன்ற கூட்டம் மாதந்தோறும் நடைபெற்று வருகிறது இந்த கூட்டத்தில் கவுன்சிலர்கள் தங்கள் வார்டுக்கு தேவையான மக்கள் நல பணிகள் குறித்து பேசுவார்கள் அந்த வகையில் 145 வது வார்டு அதிமுக கவுன்சிலரும் மாமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான நெற்குன்றம் டி.சத்தியநாதன் கடந்த பிப்ரவரி மாதம் மாமன்ற கூட்டத்தில் பேசும் போது தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் மகாத்மா காந்தியின் படமும் அவரது படம் அருகே சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் படமும் உள்ளது ஆனால் சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்டஅரங்கில் அம்பேத்கர் படம் இல்லாதது மன வேதனையாக உள்ளது எனவே தயவு கூர்ந்து இந்த மாமன்ற கூட்ட அரங்கில் டாக்டர் அம்பேத்கர் படம் வைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார் இது குறித்து மேயர் பிரியா கண்டிப்பாக இதனை பரிசளிப்பதாக கூறினார் இருப்பினும் சத்தியநாதன் கடந்த மூன்று மாதமாக தொடர்ந்து இதுகுறித்து வலியுறுத்தி வந்தார் இந்நிலையில் நேற்று சென்னை மாநகராட்சி மன்ற கூட்டம் நடைபெற்றது அப்போது அதிமுக கவுன்சிலர் மாமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் . டி.சத்தியநாதன் கோரிக்கையை ஏற்று கூட்ட அரங்கில் அம்பேத்கரின் படம் மாட்டப்பட்டது இதனால் மகிழ்ச்சி அடைந்த சத்தியநாதன் தனது கோரிக்கையை பரிசிலித்த சென்னை மற்றும் மேயர் ,துணை மேயர் மாநகராட்சி ஆணையர் ஆகியோர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

## வளசரவாக்கம் மண்டலம் 151-வது வார்டில் விளையாட்டு திடல் அமைக்க கவுன்சிலர் ச.சங்கர் கணேஷ் கோரிக்கை

**சென்னை மே 30-**

வளசர வாக்கம் மண்டலம் 151 வது வார்டில் விளையாட்டு திடல் அமைக்க வேண்டும் என்று கவுன்சிலர் ச.சங்கர் கணேஷ் கோரிக்கை மனு அளித்துள்ளார் சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் மாமன்ற கூட்டம் மேயர் ஆர்.பிரியா தலைமையில் நடைபெற்றது.

இந்த மாமன்ற கூட்டத்த நேரமில்லா நேரத்தில் பேசிய 151 வது வார்டில் பேசிய ச.சங்கர்கணேஷ் :-

எனது 151வது வார்டில் நிறைவேற்றய பல பணிகளுக்கு நன்றி தெரிவித்தது மட்டுமல்லாமல் நீண்ட நாள் கோரிக்கையான விளையாட்டுத் திடல் மற்றும் சமூதாய நல புதிய கட்டிடம் அமைத்தல், பெரு மழைக் காலங்களில் மழை நீர் தேங்காமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல், புதிய அங்கன் வாடி கட்டிடம், சேதமடைந்த மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் சாலைகளைப அகற்றி புதியதாக ஆறுமுகம் நகர் மற்றும் சப்தகிரி வாழ் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் பெற வார் பதிவேற்றம் செய்தல், அரசு மருத்துவமனையில் மருத்துவர் பற்றாக்குறை மற்றும் மெட்ரோ குடிநீர் விநியோகம் சீர்செய்தல் போன்ற மிக முக்கிய கோரிக்கைகளை எடுத்துரைத்து உடனடியாக அனைத்து பணிகளையும் நிறைவேற்றி தரும்படி மேயர், ஆர்.பிரியா துணை மேயர், மகேஷ்குமார் ஆணையர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் .

## எம்.கே.பி.நகர் பகுதியில் 2 பேருக்கு கத்திக்குத்து: தந்தை,மகன் கைது

**சென்னை மே 30-**

சென்னை, வியாசர்பாடி பகுதியில் சதிஷ், என்பவர் வசித்து வருகிறார். சதிஷின் அண்ணன் குடும்பத்தை பற்றி சந்திரசேகர் என்பவர் தவறாக கூறியதால் அண்ணன் குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டதாகவும்,

இதனால் சதிஷ், தனது அண்ணன் மகள் மற்றும் மற்றொரு அண்ணனின் மகன்கள் பிரவீன் மற்றும் பிரதீப் ஆகியோருடன் கடந்த 27.ந் தேதி அன்று மாலை, முல்லை நகர், கிழக்கு அவென்யூ சாலையில் நின்றிருந்த சந்திரசேகரிடம் சென்று ஏன் எனது அண்ணன் குடும்பத்தை பற்றி தவறாக கூறினாய் என கேட்டபோது, சந்திரசேகர், வாக்குவாதம் செய்து, தகாத வார்த்தைகளால் பேசி, சதிஷின் அண்ணன் மகளின் தலைமுடியை பிடித்து இழுத்து தகராறு செய்தபோது, மூவரும் சந்திரசேகரை தடுத்துள்ளார்.

சத்தம் கேட்டு வந்த சந்திரசேகரின் மகன் ஷியாம் என்பவர் தகாத வார்த்தைகளால் பேசி தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் சதிஷையும், தடுக்க வந்த சதிஷின் அண்ணன் மகன் பிரதீப்பையும் தாக்கிவிட்டு இருவரும் தப்பிச் சென்றனர்.

இரத்தக்காயமடைந்த சதிஷ் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வரும் நிலையில், மேற்படி சம்பவம் குறித்து கொடுத்த புகார் மீது எம்.கே.பி. நகர் காவல் நிலையத்தில் கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

எம்.கே.பி. நகர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, இவ்வழக்கில் தொடர்புடைய ஷியாம், மற்றும் இவரது தந்தை சந்திரசேகர், ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி சந்திரசேகர் மீது ஏற்கனவே ஒரு கொலை வழக்கு உட்பட 2 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளனர்.

## பெரியமேடு பகுதியில் போதைப்பொருள் வைத்திருந்த 5 பேர் கைது

**சென்னை மே 30-**

சென்னை பெருநகர காவல், கீழ்பாக்கம் துணை ஆணையர் போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு தனிப் ப டை யி ன ருக்கு கிடைத்த தகவலின்பேரில், தனிப்படையினர் மற்றும் பெரியமேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து நேற்று காலை பெரியமேடு, மை லேடி பூங்கா அருகில் நின்றிருந்த 5 பேரை விசாரணை செய்தபோது, முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்தனர். சந்தேகத்தின் பேரில், அவர்களை சோதனை செய்தபோது, அவர்கள் மெத்தக்குலோன் என்ற போதைப் பொருள் வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், பெரியமேடு காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, போதைப்பொருள் வைத்திருந்த 1. விஜய்குமார் (எ) மணிகண்டன், 2.குமார், 3.பெரியதுரை, 4.ராஜேஷ், 5.நரேஷ், ஆகிய 5 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 1 கிலோ 500 கிராம் மெத்தகுலோன் பறிமுதல் செய்யப்பட்டது.

தலைகவசம் உயிர் கவசம்

## கும்மிடிப்பூண்டி மாணவர்கள் இந்தோனேசியாவில் தங்கப்பதக்கம் வென்றனர்



**கும்மிடிப்பூண்டி,மே 30-**

இந்தோனேஷியா நாட்டில் நடைபெற்ற காமென்வெல்த் யோகாசன போட்டியில், இந்திய அணியில் இடம் பெற்ற கும்மிடிப்பூண்டி மாணவர்கள், 11 தங்கம் வென்றனர். இந்தோனேஷியா நாட்டில் உள்ள பாலி தீவில், இம்மாதம், 24 மற்றும் 25ம் தேதிகளில், காமென்வெல்த் நாடுகள் அளவிலான யோகாசன போட்டிகள் நடந்தன. காமென்வெல்த் யோகாசன விளையாட்டு சம்மேளனம் நடத்திய போட்டியில், இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் இலங்கை உட்பட, 12 நாடுகளில்,இருந்து 250 போட்டியாளர்கள் பங்கேற்றனர். இந்திய அணி சார்பில், 32 போட்டியாளர்கள் பங்கேற்றனர்.

இந்திய அணியில், கும்மிடிப்பூண்டியில் இயங்கி வரும் ஸ்ரீ சங்கரி யோகா மைய மாணவர்கள்,11 பேர், பயிற்சியாளர் சந்தியா தலைமையில் இடம் பெற்றிருந்தனர். வயது வாரியாக பல்வேறு பிரிவுகளில் நடந்த போட்டியில், கும்மிடிப்பூண்டி மாணவர்கள்,11 பேரும், அவரவர் பிரிவில் தங்கம் வென்று முதல் இடங்களை பிடித்தனர். காமென்வெல்த் போட்டியில் சாதனை படைத்த மாணவர்கள் நேற்று நாடு திரும்பிய நிலையில், கும்மிடிப்பூண்டியில் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. கும்மிடிப்பூண்டி முன்னாள் ஒன்றிய குழு தலைவர் சிவகுமார், அனைவருக்கும் மாலை அணிவித்து வரவேற்றார். பேண்டு வாத்தியம் முழுங்க, பகுதிவாசிகள் சார்பில், மாணவர்கள் அனைவரும், பஜார் வீதி வழியாக ஊர்வலமாக அழைத்து சென்று உற்சாகப்படுத்தினர். பின்னர் யோகா மையத்தில் நடந்த பாராட்டு விழாவில், ஏராளமானோர் பங்கேற்று மாணவர்களை வாழ்த்தினர்.

## தொட்டியம்: வேளாண்மை துறை சார்பில் உழவரைத் தேடி முகாம்

**தொட்டியம்,மே.30-**

தொட்டியம் வட்டார வேளாண்மைத் துறையின் சார்பில் உழவரைத் தேடி உழவர்நலத்துறை முகாம் துவக்க விழா தொட்டியம் வட்டாரம் தோ@ர்பட்டியிலும் தோட்டக்கலைத் துறை சார்பில் இதே நிகழ்வு அரசலூரிலும் நடைபெற்றது. வாரந்தோறும் இரண்டிரண்டு கிராமங்களில் நடக்கும் இந்த முகாமினை முசிறி எம்எல்ஏ காடுவெட்டி.ந.தியாகராஜன் தோ@ர்பட்டியில் துவக்கி வைத்தார்.

சிறுகமணி வேளாண் கல்லூரி பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் முசிறி எம்.எல்.ஏ .தியாகராஜன் கலந்து கொண்டு உழவர்களிடம் பேசினார். அப்போது அவர் பேசும்போது இந்தத் திட்டத்தில் உழவர்களை தேடி உங்கள் கிராமங்களுக்கே வேளாண், தோட்ட கலை, கால்நடை வளர்ப்பு, பட்டு வளர்ச்சி துறைகளும், ஊரக வளர்ச்சி திட்டத் துறைகள் வந்து குறைகள் கேட்க இருக்கின்றன என்றும் தற்போதைய தமிழக அரசு பொறுத்தவரை போற்றுவார் போற்றட்டும் தூற்றுவோர் தூற்றினாலும் மக்கள் சேவையை தொடர்ந்து செய்து வருகிறது என்றராவர். நிகழ்வில் வேளாண்மை துணை (மாநிலத் திட்டம்) இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, உதவி இயக்குனர் சௌந்தரராஜன், கால்நடை உதவி மருத்துவர் அஞ்சலிதேவி, பட்டு வளர்ச்சி துறையின் உதவி ஆய்வாளர் ஜெயந்தி, விதை சான்று அலுவலர் சோபனா உள்ளிட்ட வேளாண்துறை அது தொடர்பாக துறைகள் அதிகாரிகள் கலந்து கொண்டு உழவர்களுக்கு ஆலோசனை வழங்கினர்.

## இலவச சிறப்பு மருத்துவ முகாம்

**கும்பகோணம்,மே.30-**

கும்பகோணத்தில் உள்ள கட்டட தொழில்நுட்ப வல்லுனர்கள் நல அறக்கட்டளை, கட்டட தொழில்நுட்ப வல்லுனர்கள் நலச்சங்கம் மற்றும் சமயபுரம் சீனிவாசன் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ஆகியவை இணைந்து இலவச மருத்துவ முகாம் நடத்தியது. சீனிவாசநல்லூரில் கட்டட தொழில்நுட்ப வல்லுநர்கள் நல அறக்கட்டளை தலைவர் காளிதாஸ் தலைமையில் நடைபெற்றது.

அறக்கட்டளை நிரந்தர அறங்காவலர் ஜீவன்ராம் வரவேற்றார். முகாமிற்கு கட்டட தொழில்நுட்ப வல்லுநர் நலச் சங்கத்தின் தலைவர் செல்வமுத்துக்குமார் முன்னிலை வகித்தார். கட்டட தொழில்நுட்ப வல்லுனர்கள் நல அறக்கட்டளை உடனடி முன்னாள் தலைவர் முகமதுரபி மருத்துவ முகாமை திறந்து வைத்து, சிறப்புரை ஆற்றினார். கட்டட தொழில்நுட்ப வல்லுனர் நல அறக்கட்டளை செயலாளர் காந்தி, டிஸ்ட்ரிக்ட் கவர்னர் லியோன், இலவச மருத்துவ முகாம் ஆலோசகர் பிரகதீஸ்வரன், கட்டட தொழில்நுட்ப வல்லுநர் நல அறக்கட்டளை பொருளாளர் கண்மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கலந்து கொண்ட அனைவருக்கும் கட்டட தொழில்நுட்ப வல்லுநர்கள் நலச் சங்கம் செயலாளர் ஐயப்பன் நன்றி கூறினார்.

## ஆதி சக்தி சித்தர் ஞானபீடத்தில் ஆன்மீக வினா விடை நிகழ்ச்சி



**தஞ்சாவூர்,மே.30-**

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தாலுக்கா, திருபுவனம் இந்திரா நகரில் இந்திய பண்பாட்டு அமைப்பு அறக்கட்டளை ஆதிசக்தி சித்தர் ஞானபீடம் நடத்திய மாபெரும் ஆன்மீக வினா விடை நிகழ்ச்சி, தஞ்சை யோகம் செழியன் தலைமையில் நடைபெற்றது. மகாலட்சுமி அம்மையார் முன்னிலை வகித்தார். சங்கீதா ஹரி பிரகாஷ் வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக ஆதி சக்தி சித்தர் ஞானபீட தமிழ் சித்தர் சற்குரு அருள் கண்ணன் அடிகளார் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் கிருஷ்ணமூர்த்தி, இயக்குனர் மணிவாசகம், உதவி இயக்குனர் ராகவமூர்த்தி, கவிஞர் அபுதாபிபதி, பழனி ரமேஷ், இன்ஜினியர் ராஜேந்திரன், சேலம் செல்வி மற்றும் ஏராளமான ஆன்மீக அன்பர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அனைவருக்கும் இன்ஜினியர் சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

## தி.மலையில் வருவாய் தீர்வாய நிறைவு விழா: 361 பயனாளிகளுக்கு ரூ.1.58 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்

### துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி வழங்கினார்



**திருவண்ணாமலை மே.30-**

திருவண்ணாமலையில் வருவாய் தீர்வாய நிறைவு விழா 361 பயனாளிகளுக்கு ரூ.1.58 கோடி மதிப்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் தமிழ்நாடு சட்டப்பேரவை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி நேற்று வழங்கினார்.

திருவண்ணாமலை தாலுக்கா அலுவலகத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் 1434ஆம் பசலி வருவாய்த்தீர்வாயம் (ஜமாபந்தி) நிறைவு விழா மற்றும் விவசாயிகள் மாநாடு நேற்று நடைபெற்றது. இந்த விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ் தலைமை தாங்கினார். தி.மலை மாநகர செயலாளர் ப.கார்த்திக் வேல் மாறன் கோட்டாட்சியர் எஸ்.ராஜ்குமார் வேளாண் இணை இயக்குநர் கோ.கண்ணகி ஆகியோர் முன்னிலை வகிக்க தாசில்தார் சு.மோகனராமன் அனைவரையும் வரவேற்றார்.

இந்தவிழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட தமிழ்நாடு சட்டப்பேரவை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி பட்டா மாற்றம் உட்பிரிவு பட்டா மாற்றம் வாரிசு மற்றும் ஒபிசி சாதிச்சான்றிதழ் இலவச வீட்டுமனை பட்டா இயற்கை வேளாண்மை சாகுபடி சான்றுகள் உள்பட பல்வேறு துறைகளின் சார்பில் 361 பயனாளிகளுக்கு ரூ.1கோடியே 58 லட்சத்து 57 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த விழாவில் வட்ட வழங்கல் அலுவலர் மு.தியாகராஜன் தலைமையிடத்து துணை தாசில்தார் பி.செந்தில்குமார் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.)மெ.பிரித்திவிராஜன் தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் வேட்டவலம் மணிகண்டன் தென்னிந்திய விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலாளர் சுப்பிரமணி தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் கார்கோணம் வி.சந்திரசேகர் தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் சங்க வட்ட செயலாளர் கே.காளிமுத்து கிராம நிர்வாக அலுவலர் அ.ஏழுமலை கிராம உதவியாளர்கள் சங்க மாநில செயலாளர் பெருமாள் மற்றும் முன்னாள் மண்டல துணை தாசில்தார்கள் வருவாய் ஆய்வாளர்கள் கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளாட்சிபிரதிநிதிகள் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் அரசு அலுவலர்கள் கிராம உதவியாளர்கள் கலந்துகொண்டனர்.

முடிவில் சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் அழ.உதயகுமார் நன்றி கூறினார்.

### நல்லான்பிள்ளைபெற்றாள் கிராமத்தில்

## உழவரைத் தேடி உழவுத்துறை திட்டம்: காணொளி காட்சி வாயிலாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார்



**திருவண்ணாமலை மே.30-**

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட நல்லான்பிள்ளைப் பெற்றாள் கிராமத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பாக உழவரைத் தேடி உழவுத்துறை திட்டத்தை சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று துவக்கிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து திருவண்ணாமலை வட்டம், நல்லான்பிள்ளைபெற்றாள் ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ் 23 விவசாயிகளுக்கு ரூ.4 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் மினி கிட் (உளுந்து விதைகள்), மண்புழு உரம், குறுவை சாகுபடி - நுண்ணூட்ட கலவை உள்ளிட்ட வேளாண் கருவிகள் மற்றும் வேளாண் இடுப்பொருட்களை வழங்கி பேசுகையில்

தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு வகையான சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இன்றையதினம் செயல்படுத்தும் இத்திட்டத்தின் நோக்கம் வேளாண்மைத்துறை சார்ந்த அலுவலர்கள் ஒரு கிராமத்தில் முகாமிட்டு விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுதல் மற்றும் தொழில்நுட்ப பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை பெருக்கி பொருளாதாரத்தை முன்னேற்றுவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தரிசு நிலங்களை சாகுபடிக்கு உகந்ததாக மாற்றி நீர் ஆதாரங்களை உருவாக்கி மின்சாரம் வழங்கி, சிக்கனமாக நீரை பயன்படுத்திட சொட்டுநீர் பாசன கருவிகள் அமைத்து, நீண்ட நாட்கள் பயன்தரும் பழமரக்கன்றுகளை நடவு செய்து நிலையான வருமானத்திற்கு வித்திட்ட திட்டமான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதிகளவில் இரசாயன உரங்களின் பயன்பாட்டால் மண்வளம் குன்றி மகசூல் குறைந்து உணவு தானியங்களில் நச்சுத்தன்மை ஏற்படுவதைத் தவிர்த்திட முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

காலநிலை மாற்றத்தினை எதிர்கொண்டு குறைந்த நீரில் வெப்பத்தினை தாங்கி வளரும் சிறுதானிய பயிர்களின் சாகுபடி மூலம் விவசாய வளர்ச்சியை நிலைப்படுத்திட சிறுதானிய இயக்கத்திட்டம் போன்ற திட்டங்கள் உழவரை தேடி உழவர் நலத்துறை என்னும் திட்டத்தின் மூலம் செயல்படுத்திட உள்ளது.

மேலும், வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த இதர துறைகளின் தொழில்நுட்பங்கள், திட்டங்கள், இயந்திரங்கள், மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்ற திட்டங்களின் பயன்களை விவசாயிகளுக்கு கொண்டு சேர்க்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இது மட்டுமின்றி, வேளாண் சார்ந்த புதிய தொழில் நுட்பங்கள், புதிய உத்திகள், சாகுபடி வேளாண்மை முறைகள், விதை நேர்த்தி முறைகள், புதிதாக கண்டறிந்த வீரிய இரகங்கள், அவற்றின் சிறப்பாற்றல்கள் குறித்தும், ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை, உர மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, பயிர் காப்பீடு செய்வதன் நன்மைகள், மாவட்டம் மற்றும் மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டிகள், உழவர் சந்தை, வேளாண் விளைபொருட்களின் மதிப்பு கூட்டுதல், வீட்டு காய்கறி தோட்டம் அமைத்தல், கால்நடை பராமரிப்பு, மீன்வளர்ப்பு போன்றவற்றின் அவசியத்தையும் நன்மைகளையும் குறித்து எடுத்துரைத்து ஆர்வமுள்ள விவசாயிகளை ஒன்று திரட்டி இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. எனவே விவசாய பெருமக்கள் அரசு செயல்படுத்தும் அனைத்து திட்டங்களையும் அறிந்து பயன்படுத்திக் கொண்டு பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் வேளாண் இணை இயக்குநர் கோ.கண்ணகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மலர்விழி, உதவி இயக்குநர் (வேளாண்) ஆர்.முத்துராமன் வேளாண் அலுவலர்கள் ஜி.தாமஸ் முனியப்பன் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் து.பரமேஸ்வரன் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) மெ.பிரித்திவிராஜன் கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் எஸ். ஜெயக்குமார் மற்றும் தோட்டக்கலைத்துறை சார்ந்த அலுவலர்கள், அரசு துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**அறிவிப்பு**

திருவள்ளூர் திருமுல்லைவாயல் நகராட்சி நகர் மெயின் ரோடு முகவரியில் வசிக்கும் பரமராஜு Clo சடையாய தேவர் ஆகிய நான் எனக்கு சொந்தமான ஆவணம் எண் - 81/ 2012 இதனை 08-05-2025 அன்று அரக்கோணம் பழைய பஸ் நிலையம் கொண்டு வந்த போது காணவில்லை இது தொடர்பாக ஆன்லைன் LDR - NO - 939202500165 எண்ணில் புகார் தரப்பட்டுள்ளது எனவே யாரிடமாவது ஆவணம் கிடைத்தால் தரவும்.

இப்படிக்கு
பரமராஜு

## செங்கம் பெருமாள் கோயிலுக்கு 16 கிலோ எடையுள்ள வெள்ளிக்கவசம் செய்யும் பணி

### மு.பெ.கிரி எம்எல்ஏ தொடங்கி வைத்தார்



**செங்கம் மே30**

செங்கம் ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ வேணுகோபால பார்த்தசாரதி பெருமாள் கோயிலுக்கு சுமார் 17 லட்சம் மதிப்பில் 16 கிலோ எடையுள்ள வெள்ளிக்கவசம் செய்ய பணி தொடங்கப்பட்டது. இந்தப் பணிக்கு செங்கம் தொகுதி எம்எல்ஏ மு.பெ.கிரி ஐந்து கிலோ எடை வெள்ளி தன் சொந்த செலவில் வழங்கினார். மேலும் சுமார் 30 உபயதாரர்கள் மீதமுள்ள வெள்ளியை வழங்கினர். கோயில் கல் மண்டபத்தில் நடந்த விழாவிற்கு அறங்காவலர்கள் குழு தலைவரும் நகர திமுக செயலாளருமான அன்பழகன் தலைமை தாங்கினார். அறங்காவலர்கள் ஸ்ரீதர் செந்தில்குமார் முன்னிலை வகித்தனர். பட்டாச்சாரியார்கள் சீதாராமன் அரவிந்தன் ஆகியோர் வெள்ளியை பெருமாள் பாதத்தில் வைத்து சிறப்பு பூஜை செய்தனர்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக செங்கம் எம்எல்ஏ மு.பெ.கிரி கலந்து கொண்டு பூஜிக்கப்பட்ட வெள்ளியை கும்பகோணம் ஸ்தபதி ரமேஷ் வசம் அளித்து திருக்கோயில் கடந்த 9ம் தேதி கும்பாபிஷேகம் நடந்த நிலையில் மற்றும் வருகிற ஜூன் மாதம் 9ம் தேதி மகாகருட சேவை நடக்கிற நிலையில் மண்டலாபிஷேக விழாவுக்குள் வெள்ளி கவசம் செய்து முடித்துத் தருமாறு தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ராம்பிரதீபன் தாசில்தார் முருகன் திருப்பணி குழு தலைவர் கணேசர் குரூப்ஸ் வழக்கறிஞர் கஜேந்திரன் ராமகிருஷ்ண விவேகானந்த பாவப் பிரச்சார பரிஷத் மாநில கன்வீனர் பாண்டுரங்கன் ஸ்ரீ சக்தி பாலிடெக்னிக் கல்லூரி தலைவர் அக்ரி வெங்கடாஜலபதி தொழிலதிபர்கள் வெங்கடேஸ்வரா பாபு நகைக்கடை சம்பத் மளிகை முரளிதரன் சக்திமுருகன் சேர்மராஜா ரியல் எஸ்டேட் சேட்டு மண்டி சங்கர் செல்வம் கிருத்திகா பாபு தேசிகன் அரசு ஒப்பந்ததாரர் சங்கர்மாதவன் மற்றும் திமுக நிர்வாகிகள் பொதுக்குழு உறுப்பினர் பிரபாகரன் ஒன்றிய செயலாளர் அந்தனூர் மனோகரன் நகர மன்ற தலைவர் சாதிக்பாஷா முன்னாள் தாலுக்கா கூட்டுறவு சங்க தலைவர் முருகன் நகர மன்ற உறுப்பினர்கள் ரேவதி முருகமணி அமுதா தட்சிணாமூர்த்தி சந்தியா ராபின்சன் சத்தியா முல்லை முன்னாள் பேரூராட்சி உறுப்பினர்கள் அப்துல்வாஹித் சீனுவாசன் பாமக முன்னாள் மாவட்ட செயலாளர் பிஞ்சூர் சுரேஷ் கூட்டுறவு சங்க செயலாளர் கிருஷ்ணமூர்த்தி ஓய்வு பெற்ற அலுவலர் சங்க மாவட்ட துணை தலைவர் மாணிக்கம் உட்பட முக்கிய பிரமுகர்கள் பத்து நாள் திருவிழா உபயதாரர்கள் பக்தர்கள் கலந்து கொண்டனர்

### ராணிப்பேட்டை மாவட்டத்தில்

## தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி சங்க செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம்



**ராணிப்பேட்டை, மே,30-**

ராணிப் பேட்டை மாவட்ட தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி சங்க செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் ஆற்காடு ஜனசங்க கட்டிடத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் ரா.விஜயகுமார் தலைமை தாங்கினார்.ஒருங்கிணைந்த முன்னாள் மாவட்ட செயலாளர்ஏ.சி.சுந்தரேசன், மாநில பொதுக்குழு உறுப்பினர் வீரபத்திரன், மாவட்ட பொருளாளர் ஏ.முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தார்.மாவட்ட துணை செயலாளர் ப.நியுட்டன்கேப்ரியல் வரவேற்றார்.மாவட்ட செயலாளர் அ.தேவராஜன் கூட்ட விளக்கவுரையாற்றினார்.மாநில தலைவர் சி,அரசு சங்கபணிகள், கோரிக்கைகள் மற்றும் பணிநிறைவு ஆசிரியர்களை பாராட்டி பேசினார். இதில் அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தை தமிழக அரசு அமுல்படுத்த வேணடும், இடைநிலை ஆ சிரியர்களுக்கு மத்தியஅரசுக்கு இணையான ஊதியம் வழங்கவேண்டும், காலி பணியிடங்களை நிரப்பி அனைத்து பதவி உயர்வு நியமனங்களை வழங்கிடவேண்டும் ,அரசு கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை எனில் ஜேக்டோ,ஜியோ அமைப்புடன் இணைந்து போராட்டம் நடத்துவது, என்பது உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.இதில் பணி நிறைவு பெற்ற மாநில செயற்குழு உறுப்பினர் . வெங்கடேசன்,வெங்கட்ராமன்ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர் இந்த கூட்டத்தில் நெமிலி வட்டார தலைவர் தினகர்,செயலாளர் கோ.சண்முகம், அரக்கோணம் வட்டார செயலாளர் சண்முகவடிவேல், திமிரி வட்டார செயலாளர்சிவக்குமார், வாலாஜா பேட்டை வட்டார செயலாளர் அபித் கிளமெண்ட், உள்பட சங்க நிர்வாகிள்உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட துணை தலைவர் கோவிந்தராஜன் நன்றி கூறினார்.

## அரக்கோணம் ஜமாபந்தி நிறைவு விழாவில் ரூ 2.7 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்: கலெக்டர் சந்திரகலா வழங்கினார்



**அரக்கோணம் மே 30**

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் 5 நாள் ஜமாபந்தி நிறைவு தினம் நேற்று நடைபெற்றது மாவட்ட கலெக்டர் சந்திரகலா தலைமையில் மாநாடு போல் விழா நிறைவு பெற்றது. ஒன்றிய சேர்மன் நிர்மலா நகர சேர்மன் லட்சுமி மற்றும் விவசாய பிரதிநிதிகள் மோகன் காந்தி முதூர் காந்தி முன்னிலை வகித்தனர் தாசில்தார் வெங்கடேசன் வரவேற்றார் நிகழ்ச்சியில் ரு 2.7 கோடி மதிப்பிலான அரசு நலதிட்ட உதவி களை 284 பயனாளிகளுக்கு கலெக்டர் வழங்கினார்

**தணிகை போளூர்**

தணிகைப் போளூர் ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடேசன் ஜமாபந்தில் மனு கொடுத்தார் அந்த மனுவில் போளூர் ரயில்வே கேட் அருகே நெடுஞ்சாலை குறுக்கே வேக தடை அமைத்து தர வேண்டும் 100 ஒட்டர் இன குடும்பத்தாருக்கு வழங்கபட்ட வீட்டுமனை பட்டா விவரங்களை அரசு கணக்கில் ஏற்ற வேண்டும் மேலும் காலணி பகுதியில் வசிக்கும் ஏழு குடும்பத்தாருக்கு வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் இவ்வாறு மனுவில் குறிப்பிட்டார்

**ஆணைப்பாக்கம்**

செங்கல்வராயன் கொடுத்த மனுவில் மிட்ட பாளையம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் அருந்ததியர் மக்கள் பயன்படுத்தும் பயிர் நிலங்கள் மீட்டும் பட்டா வழங்கவும் வேண்டும் என மனு அளித்தார் அப்போது புரட்சி தேசிய கழகம் தலைவர் தண்டபாணி விபீஷ்னன் டெல்லி கார்த்திகேயன் மற்றும் பலர் உடன் இருந்தனர்

தலித் மக்கள் விடுதலை முன்னணி ஒன்றிய செயலாளர் கலைமணி கொடுத்த மனுவில் தணிகை போளூர் பெரிய ஏரி கரைகள் பலவீனமாக இருப்பதால் அடிக்கடி மழைக்காலங்களில் ஏரிகரை உடைந்து வெள்ளநீர் போளூர் வாணியம்பேட்டை உளிய நல்லூர் மூதூர் ஆகிய கிராமங்களுக்குள் புகுந்து விடுகிறது

ஆகவே ஏரியின் கரை ஓரம் கான்கிரீட் கரை அமைத்து தர வேண்டும் என கேட்டுக் கொண்டார். கிராம அதிகாரிகள் தணிகாசலம் ராஜேஷ் விழா ஏற்பாடுகளில் சக கிராம அலுவலர்களுடன் இணைந்து ஈடுபட்டனர்

## அரக்கோணம் 28-வது வார்டில் 40 பேருக்கு மாற்று இடம் வேண்டும்: ஜமாபந்தியில் திமுக கவுன்சிலர் ராஜலட்சுமி மனு



**அரக்கோணம் மே 30**

அரக்கோணம் 28வது வார்டில் வசிக்கும் 40 குடும்பங்களுக்கு மாற்று இடம் வழங்க வேண்டும் என திமுக கவுன்சிலர் ராஜலட்சுமிஅரக்கோணம் ஜமாபத்தி அதிகாரியிடம் மனு கொடுத்தார் அந்த மனுவில் அவர் கூறியது ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் நகரம் 28வது வார்டு சத்தியவாணிமுத்து சோமசுந்தரம் நகரில் ரயில்வே குடியிருப்பு காலி மனை உள்ளது இங்கு 30 வருடங்களாக 40 குடும்பத்தினர் குடிசை போட்டு வசித்து வந்தனர் இந்த நிலையில் ரயில்வே நிர்வாகம் 40 குடும்பத்தாரை காலி செய்யும்படி உத்தரவிட்டுள்ளது ஆகவே என்ன செய்வது என தெரியாமல் பரிதவித்து உள்ளனர் ஆகவே அந்த 40 குடும்பங்கள் மீது அன்பு காட்டி மாற்று இடத்தினை ஒதுக்கி தருமாறு .கேட்டுக கொள்கிறேன் என மனுவில் அரக்கோணம் நகராட்சி திமுக பெண் உறுப்பினர் ராஜலட்சுமி மனுவில் குறிப்பிட்டு உள்ளார் அப்போது திமுக நகர மன்ற உறுப்பினரும் நகர அவை தலைவருமான துரை சீனிவாசன் உடனிருந்தார்

ஆம்புலன்சுக்கு வழிவிடுங்கள்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**பென்னாத்தூர் பேரூராட்சி**
**வேலூர் மாவட்டம்**

ந.க.எண்.130/2025 **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** நாள்: 26.05.2025

வேலூர் மாவட்டம் பென்னாத்தூர் முதல்நிலை பேரூராட்சியில் சிறப்பு நிதி திட்டம் 2025–26 திட்டத்தின்கீழ் ரூ.61.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.5 சப்தலிபுரம் பிள்ளையார் கோவில்தெரு, பிள்ளையார் கோவில் 2வது தெரு, வார்டு எண்.10 மசூதி தெரு, வார்டு எண்.15 பிள்ளையார் கோவில்தெரு, ஊசூரார் கொட்டாய், அல்லிவரம் – சாத்தூரப்பாளையம் ரோட் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளிகள் பதிவு பெற்ற மற்றும் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து 11.06.2025 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை (அலுவலக கடிகாரப்படி) இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் இ–டெண்டரிங் முறையில் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது. வரப்பெற்ற ஒப்புந்தப்புள்ளிகள் அன்று மாலை 3.30 மணிக்கு வருகை புரிந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவம் வேண்டுவோர் 11.06.2025 ஆம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை www.tntenders.gov.in / http://townpanchayats.tn.gov.in/tender என்ற இணையதளம் மூலம் E-Token / Digital signature Card உபயோகித்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். இதர விபரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் தெரிந்துகொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2685 / ஒப்பந்தப்புள்ளி / 2025
செயல் அலுவலர்
பென்னாத்தூர் பேரூராட்சி, வேலூர் மாவட்டம்

**வெள்ளிமலை பேரூராட்சி**
**கன்னியாகுமரி மாவட்டம்**

ந.க.எண்: 116/2025/அ1 **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** நாள்: 29.05.2025

சிறப்பு நிதி திட்டம் 2025-26 -ல் வெள்ளிமலை பேரூராட்சிக்குட்பட்ட மணவிளை முதல் உரப்பனவிளை செல்லும் தார் சாலை மேம்பாடு செய்தல் பணி **ரூ. 56.00 இலட்சம்** மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் **17.06.2025 பிற்பகல் 3.00 மணி** வரை **https://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் வரவேற்கப்படுகிறது. ஒப்பந்தங்கள் **17.06.2025 (செவ்வாய்க்கிழமை) 3.30 மணிக்கு** திறக்கப்படும். இதர விவரங்களை இணையதளம் வாயிலாகவும் பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் வேலை நேரங்களில் கேட்டும் தெரிந்து கொள்ளலாம்.

**செயல் அலுவலர்,**
**வெள்ளிமலை பேரூராட்சி**

செ.ம.தொ.இ/2697/ஒப்பந்தப்புள்ளி/2025

**வெள்ளிமலை பேரூராட்சி**
**கன்னியாகுமரி மாவட்டம்**

ந.க.எண்: 117/2025/அ1 **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** நாள்: 29.05.2025

சிறப்பு நிதி திட்டம் 2025-26 -ல் வெள்ளிமலை பேரூராட்சிக்குட்பட்ட கழுவன்தட்டுவிளை முதல் வருக்கத்தட்டு செல்லும் தார்சாலை மற்றும் மணலிவிளை சிறுபாலம் முதல் மேற்கு பத்மநாபசுவாமி கோவில் செல்லும் தார்சாலை மேம்பாடு செய்தல் பணி **ரூ. 41.00 இலட்சம்** மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் **17.06.2025 பிற்பகல் 3.00 மணி** வரை **https://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் வரவேற்கப்படுகிறது. ஒப்பந்தங்கள் **17.06.2025 (செவ்வாய்க்கிழமை) 3.30 மணிக்கு** திறக்கப்படும். இதர விவரங்களை இணையதளம் வாயிலாகவும் பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் வேலை நேரங்களில் கேட்டும் தெரிந்து கொள்ளலாம்.

**செயல் அலுவலர்,**
**வெள்ளிமலை பேரூராட்சி**

செ.ம.தொ.இ/2696/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
**பேரூராட்சிகள் துறை, தேனி மாவட்டம் - கோம்பை பேரூராட்சி**
ந.க.எண். 306/ 2024 **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** நாள். 19.05.2025

தேனி மாவட்டம் கோம்பை பேரூராட்சியில் சிறப்பு மான்யத்திட்டம் (Special Fund) 2025-2026 இன் கீழ் கோம்பை பேரூராட்சி மேட்டுக்காலனி முதல் அம்மாபட்டி வரையுள்ள சாலையில் தார்ச்சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.

1) தேனி மாவட்டம் கோம்பை பேரூராட்சியில் மேற்காணும் பணிகளை மேற்கொள்ள பேரூராட்சி செயல் அலுவலரால், தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து பணிகள் வாரியாக ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விபரங்களை சம்பந்தப்பட்ட பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
2) பணியின் மதிப்பீடு ரூ.103.00 இலட்சம்
3) பணி வாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை http://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.

| 4) பொதுவான நேரம் மற்றும் நாள். | |
|---|---|
| அ) ஒப்பந்த நமூனா இறக்கம் செய்தல் | 20.05.2025 காலை 10.00 மணி முதல் 12.06.2025 மாலை 3.00 மணி வரை |
| ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 12.06.2025 மாலை 3.00 மணி வரை |
| இ) ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் | 12.06.2025 மாலை 3.30 மணி |

ஒப்பந்தபுள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 2680 / ஒப்பந்தப்புள்ளி / 2025
**செயல் அலுவலர்**
**கோம்பை பேரூராட்சி, தேனி மாவட்டம்.**

**பாலப்பள்ளம் பேரூராட்சி**
கன்னியாகுமரி மாவட்டம்

ந.க.எண்: 10/2025/அ1 **ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை** நாள்: 23.05.2025

கன்னியாகுமரி மாவட்டம், பாலப்பள்ளம் முதல் நிலை பேரூராட்சியில் சிறப்பு நிதி திட்டம் 2025 - 2026 -ன் கீழ், பாலப்பள்ளம் முதல்நிலை பேரூராட்சியில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள https://tntenders.gov.in என்ற இணையதளம் வாயிலாக ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | நமூனா கட்டணம் ரூ. | வைப்புத் தொகை ரூ. | ஒரு உறை முறை / இரு உறை முறை |
|---|---|---|---|---|---|
| 1 | குறும்பனை பாரியக்கல் பீச் சாலை, மிடாலக்காடு பாலப்பள்ளம் சாலை, மிடாலக்காடு வடக்கு மிடாலக்காடு சானல்கரை சாலை, நீர்வக்குழி றைஸ்மில் புதுக்காடு வெட்டிவிளை சாலை, மிடாலக்காடு திக்கவிளை கடமான்குழி சாலை, மிடாலக்காடு வடக்கு மிடாலக்காடு சாலை, தெற்கு பிடாகை பாலப்பள்ளம் குளம் மிடாலக்காடு தார் சாலைகளை மறுசீரமைத்தல் | 280.00 | 17,700 | 2,80,000 | இரு உறை முறை |

1. ஒப்பந்தப்புள்ளிப் படிவம் பதிவிறக்கம் செய்தல் / பெற்றுக் கொள்ளுதல்: **23.05.2025 முதல்** (இணையதளம் வாயிலாக).
2. ஒப்பந்தப்புள்ளி நமூனா வழங்கப்படும் கடைசி நாள்: **17.06.2025 பிற்பகல் 3.00 மணி வரை** (இணையதளம் வாயிலாக).
3. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்: **17.06.2025 பிற்பகல் 3.00 மணி வரை** (இணையதளம் வாயிலாக).
4. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள்: **17.06.2025 பிற்பகல் 3.30 மணிக்கு** (இணையதளம் வாயிலாக).

தொழிற்நுட்ப தகுதி மற்றும் இதர ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் குறித்த விவரங்கள் மற்றும் கூடுதல் விவரங்கள் அலுவலக வேலை நேரத்தில் அலுவலகத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். வைப்புத் தொகை பேரூராட்சியின் **SBI, Alanji Branch Bank Account No. 67008080684 (IFSC No. SBIN 0070524)** ல் இணையதளம் மூலம் செலுத்தப்பட வேண்டும்.

தலைவர்
பாலப்பள்ளம் முதல்நிலை பேரூராட்சி
செ.ம.தொ.இ/2679/ஒப்பந்தப்புள்ளி/2025
செயல் அலுவலர்
பாலப்பள்ளம் முதல்நிலை பேரூராட்சி

**ரீத்தாபுரம் முதல்நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்**
**சிறப்பு நிதி திட்டம் (Special Fund) 2025-26**

ந.க.எண். 78/2025/அ1 **ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை** நாள்: 26.05.2025

| வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | செலுத்த வேண்டிய தொகை: முன் வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவீதம் | ஒப்பந்ததாரரின் தகுதி | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்) |
|---|---|---|---|---|
| வேலையின் பெயர்: சிவன்கோவில் பாலம் முதல் பத்தறை வாய்க்கால் கரை சாலை, பிலாங்கரை பாம்பூரி வாய்க்கால் பாலம் சாலை, பிலாங்கரை பூந்தியான்விளை சாலை, பிலாங்கரை மேற்கு பாம்பூரி வாய்க்கால் சாலை சிமெண்ட் தளம் அமைத்தல். | 104.00 | 104000 | Class-I | 6 மாதங்கள் |

ரீத்தாபுரம் பேரூராட்சி 2025–26–ம் ஆண்டு சிறப்பு நிதி திட்டம் (Special Fund) 2025-2026-ல் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு உறைகள் (Two Cover System) கொண்ட இணையதள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. பணிக்கான வைப்புத் தொகையினை, கனரா வங்கி, பாலப்பள்ளம் கிளை. கணக்கு எண்.4124101004851, IFSC Code : CNRB0004124 "Executive Officer, Reethapuram Town Panchayat" ல் இணையதளம் மூலம் செலுத்தப்பட வேண்டும்.ஒப்பந்தப்புள்ளிகள் 17.06.2025 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.30 மணி வரை இணையதளம் வாயிலாக பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 17.06.2025 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 04.00 மணிக்கு இணையதளம் வாயிலாக செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பரிசீலிக்கப்படும். 1. ஒப்பந்தப்புள்ளி சம்மந்தப்பட்ட நிபந்தனைகளை ரீத்தாபுரம் பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். 2. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 17.06.2025 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.00 மணிக்குள் https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**தலைவர்**
ரீத்தாபுரம் முதல்நிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்
செ.ம.தொ.இ / 2652 / ஒப்பந்தப்புள்ளி / 2025
**செயல் அலுவலர்**
ரீத்தாபுரம் முதல்நிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்

## இந்திய டெஸ்ட் அணியில்
# ஸ்ரேயஸ் அய்யர் தேர்வாகாதது குறித்து கம்பீர் மழுப்பல் பதில்



மும்பை, மே 30-

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில் ஸ்ரேயஸ் அய்யரை தேர்வு செய்யாமல் விட்டது குறித்து அணி பயிற்சியாளர் கம்பீர் மழுப்பல் பதில் அளித்துள்ளார்.

**பலத்த ஐயம்...**

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில் ஸ்ரேயஸ் அய்யர் புறக்கணிக்கப் பட்டுள்ளார். கேப்டன்கள், சீனியர்கள் இல்லாத இந்திய அணியில் கேப்டனாகவே கூட ஸ்ரேயஸ் அய்யரை தேர்வு செய்திருக்க வேண்டும். ஆனால், அணியிலேயே இல்லை என்பது பெரிய ஆச்சரியம் என்பதோடு கவுதம் கம்பீர் மீது பலத்த ஐயங்களை எழுப்பக் கூடியதே.

**நான் செலக்டர் அல்ல...**

ஸ்ரேயஸ் அய்யரை ஏன் தேர்வு செய்யவில்லை என்று கேட்டதற்கு 'நான் செலக்டர் அல்ல' என்று ஒற்றை வரியில் அதைப் புறக்கணிக்கிறார் கம்பீர் என்றால் நிச்சயம் குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்ற முதுமொழிக்கேற்ப ஸ்ரேயஸ் அய்யர் தேர்வில் இவரது கையும் இருக்கிறது என்பதே நம் வாசிப்பு.

**பெரிய போர்ஸ் ஆக...**

ஸ்ரேயஸ் அய்யர் உள்நாட்டு கிரிக்கெட்டிலும் அசத்தி வருகிறார். தற்போது ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் கிங்ஸ் அணி ரிக்கி பாண்டிங் பயிற்சியின் கீழ் அவரது கைவண்ணத்தில் பட்டைத் தீட்டப்பட்ட ஸ்ரேயாஸ் அய்யர் கேப்டன்சியில் இதுவரை இல்லாத அளவுக்கு ஒரு பெரிய போர்ஸ் ஆக வந்து நின்றுள்ளது. கடந்த பிப்ரவரி 2024-ல் அய்யர் கடைசியாக டெஸ்ட் போட்டியில் ஆடினார். அதன் பிறகே சாம்பியன்ஸ் டிராபியிலும் ஸ்ரேயஸ் அய்யர் அபாரமாக ஆடி 5 போட்டிகளில் 243 ரன்களை எடுத்தார். ரஞ்சி சீசனில் 7 இன்னிங்ஸ்களில் 480 ரன்களை எடுத்தார்.

**அதிருப்தி...**

தற்போது ஐ.பி.எல். தொடரில் 14 போட்டிகளில் 514 ரன்களை 171.90 என்ற ஸ்ட்ரைக் ரேட்டில் எடுத்துள்ளார். சராசரி 51.40. சாம்பியன்ஸ் டிராபி அணியிலேயே கம்பீர், அய்யரைத் தேர்வு செய்தது குறித்து அதிருப்தி வெளியிட்டதாக செய்திகள் வெளியாகின. இப்போது இது. ஸ்ரேயஸ் அய்யர் மீது கம்பீருக்கு என்ன காண்டு என்று தெரியவில்லை.

**பேவரிட்டிசம்...**

சாய் சுதர்ஷனுக்கு இடம் இருக்கிறது ஆனால் பிரமாதமாக ஆடி வரும் கேப்டன்சி வீரர் ஸ்ரேயஸ் அய்யருக்கு இடமில்லை என்று அகார்க்கரும் தெரிவித்திருப்பது, வேறு ஏதோ நடக்கிறது என்ற ஐயத்தைதான் எழுப்புகிறது. கம்பீர் சொல்வது போல் ஆட்டத்திறன், பார்ம் போன்றவை தேர்வில் தவிர்க்கப்படுகிறது போலும். அதை விடுத்து சொந்த எண்ணங்களும் பேவரிட்டிசமும் அணித்தேர்வில் இடம்பிடித்துள்ளது போலும்.

## சிங்கப்பூர் ஓபன் பாட்மிண்டன்:
# சாத்விக் - ஷிராக் இணை காலிறுதிக்கு முன்னேற்றம்

சிங்கப்பூர், மே 30-

சிங்கப்பூர் ஓபன் பாட்மிண்டன் தொடரில் இந்தியாவின் சாத்விக் - ஷிராக் ஜோடி கால் இறுதிக்கு முன்னேறியது.

**நேர் செட்டில்...**

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் தரவரிசையில் 27-வது இடத்தில் உள்ள இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் ராங்கி ரெட்டி, ஷிராக் ஷெட்டி ஜோடி, 41-வது இடத்தில் உள்ள மலேசியாவின் சூங் ஹான் ஜியான், முஹம்மது ஹைகல் ஜோடியை எதிர்த்து விளையாடியது. இதில் சாத்விக் - ஷிராக் ஜோடி 21-16, 21-13 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று 2-வது சுற்றுக்கு முன்னேறியது.

**சாத்விக் - ஷிராக் வெற்றி...**

நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற 2-வது சுற்று ஆட்டத்தில் இந்தோனேசியாவின் சபர் காரியமன் மற்றும் முஹம்மது ரெசா ஜோடியை 19-21, 21-16, 21-18 என்ற கணக்கில் சாத்விக் - ஷிராக் இணை வீழ்த்தினர். இந்த ஆட்டம் சுமார் ஒரு மணி நேரம் 14 நிமிடங்கள் வரை நீடித்தது.


**வெளியேறிய லக்சயா சென்...**

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் 17-ம் நிலை வீரரான இந்தியாவின் லக்சயா சென், 19-ம் நிலை வீரரான சீன தைபேயின் லின் ஹன் யியுடன் மோதினார். இதில் முதல் செட்டை லக்சயா சென் 21-15 என கைப்பற்றினார். 2-வது செட்டில் பதிலடி கொடுத்த லின் ஹன் அந்த செட்டை 21-17 என தன்வசப்படுத்தினார். இதனால் வெற்றியை தீர்மானிக்கும் கடைசி செட் ஆட்டம் பரபரப்பானது. இதில் லக்சயா சென் 5-13 என்ற கணக்கில் பின்தங்கிய நிலையில் இருந்த நிலையில் முதுகு வலி காரணமாக போட்டியில் இருந்து வெளியேறினார். இதனால் லின் ஹன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

**கலப்பு பிரிவில் தோல்வி...**

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோகன் கபூர், ருத்விகா ஷிவானி காடே ஜோடி 21-16, 21-19 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் சென் ஹி யி, பிரான்செஸ்கா கோர்பெட் ஜோடியை வீழ்த்தி கால் இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது. இருப்பினும் ஹாங்காங்கின் டாங் சுன் மற்றும் டீஸ் யிங் சூட் ஜோடியிடம் நேர் செட்களில் வீழ்ந்தனர்.

## நார்வே கிளாசிக்கல் செஸ்:
# எரிகைசியிடம் வீழ்ந்தார் குகேஷ்



ஸ்டாவஞ்சர், மே 30-

நார்வே செஸ் போட்டியில் உலக சாம்பியனான இந்தியாவின் டி.குகேஷ் 2-வது சுற்றில் சகநாட்டைச் சேர்ந்த அர்ஜூன் எரிகைசியிடம் தோல்வி அடைந்தார்.

**ஸ்டாவஞ்சர் நகரில்...**

நார்வே கிளாசிக்கல் செஸ் போட்டி அந்நாட்டில் உள்ள ஸ்டாவஞ்சர் நகரில் நடைபெற்று வருகிறது. 6 வீரர்கள் கலந்து கொண்டுள்ள இந்தத் தொடரின் முதல் சுற்றில் உலக சாம்பியனான இந்தியாவின் டி.குகேஷ், உலகின் முதல் நிலை வீரரான நார்வேயின் மேக்னஸ் கார்ல்சன் தோல்வி அடைந்திருந்தார்.

**எரிகைசி வெற்றி...**

இந்நிலையில் நேற்று 2-வது சுற்றில் சகநாட்டைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டரான அர்ஜூன் எரிகைசியுடன் மோதினார் குகேஷ். அர்ஜூன் எரிகைசி கருப்பு காய்களுடனும், குகேஷ் வெள்ளை காய்களுடனும் களமிறங்கினர். 4 மணி நேரம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் உலக தரவரிசையில் 4-வது இடத்தில் உள்ள அர்ஜூன் எரிகைசி 62-வது நகர்த்தலின் போது வெற்றி பெற்றார்.

**2-வது இந்திய வீரர்...**

இந்த வெற்றியின் மூலம் 21 வயதான அர்ஜூன் எரிகைசி 2,801 ரேட்டிங் புள்ளிகளை பெற்று வரலாற்றில் அதிக ரேட்டிங் புள்ளிகளை குவித்தவர்களின் பட்டியலில் 15-வது இடத்தை பிடித்தார். அதேவேளையில் அதிக ரேட்டிங்களை புள்ளிகளை குவித்த 2-வது இந்திய வீரர் என்ற பெருமையையும் பெற்றார். இதற்கு முன்னர் விஸ்வநாதன் ஆனந்த் 2,800 புள்ளிகளை கடந்திருந்தார்.

**கடைசி இடத்தில் குகேஷ்...**

2 சுற்றுகளின் முடிவில் அர்ஜூன் எரிகைசி 4.5 புள்ளிகளுடன் முதலிடத்தை அமெரிக்காவின் ஹிகாரு நகமுராவுடன் பகிர்ந்து கொண்டுள்ளார். ஹிகாரு நகமுரா தனது 2-வது சுற்றில் மேக்னஸ் கார்ல்சனுடன் மோதினார். இந்த ஆட்டம் டிராவில் முடிவடைந்தது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற அர்மகேடான் விளையாட்டில் ஹிகாரு நகமுரா வெற்றி பெற்றார். இதனால் அவருக்கு 1.5 புள்ளிகள் கிடைத்தது. குகேஷ் புள்ளிகள் கணக்கை தொடங்காமல் கடைசி இடத்தில் உள்ளார். கார்ல்சன் 4 புள்ளிகளுடன் 3-வது இடத்தில் உள்ளார். அமெரிக்காவின் பேபியானோ கருனா 3 புள்ளிகளுடன் 4-வது இடத்திலும், சீனாவின் வெயி யி 1 புள்ளியுடன் 5-வது இடத்தில் உள்ளார்.

# வீரர்கள் இடையே மோதல்

வங்காளதேசம் - தென் ஆப்பிரிக்கா வளர்ந்து வரும் வீரர்கள் (எமெர்ஜிங்) அணிகளுக்கு இடையே 4 நாள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நடைபெற்ற முதல் போட்டி டிரா ஆனது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 2-வது மற்றும் கடைசி போட்டி கடந்த 27-ம் தேதி தொடங்கியது. இந்த போட்டியின் 2-வது நாளான நேற்று வங்காளதேச பேட்ஸ்மேன் ரிப்பன் மொண்டோல் மற்றும் தென் ஆப்பிரிக்க வீரர் ட்செபோ நடுலி களத்தில் மோதிக் கொண்டது இணையத்தில் வைரலாகி வருகிறது.

பேட்டிங் செய்து கொண்டிருந்த வங்காளதேச வீரர் ரிப்பன், நடுலி பந்துவீச்சில் சிக்சர் அடித்தார். அதன் பிறகு இருவரும் முறைத்துக் கொண்டே இருந்தனர். இதனால் கடுப்பான நடுலி, எதிர் முனையை நோக்கி சென்று கொண்டிருந்த ரிப்பன் உடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். வாக்குவாதம் முற்றவே இரண்டு வீரர்களும் ஒரு தள்ளுமுள்ளில் ஈடுபட்டனர், அதன் பிறகு அது ஒரு கைகலப்பாக மாறியது. நடுலி பலமுறை ரிப்பனின் ஹெல்மெட்டை இழுத்தார். நடுவர்கள் உள்ளே புகுந்து இருவரையும் சமாதானம் செய்து வைத்தனர். இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

**கண் தானம் செய்வீர்**

# இயற்கை பாதுகாப்பில் சிக்கிம் முன்மாதிரி: பிரதமர் பெருமிதம்

புதுடெல்லி, மே 30-

சிக்கிம் இயற்கை பாதுகாப்பில் முன்மாதிரியாக உள்ளது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி சிக்கிம், மேற்கு வங்காளம், பீகார், உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட 4 மாநிலங்களுக்கு பயணம் செய்ய திட்டமிட்டிருந்தார். சிக்கிம் உருவாகி 50 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் கொண்டாடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியில் நேற்று காலை கலந்து கொள்ள திட்டமிட்டிருந்தார்.

இதற்காக சிக்கிமின் கேங்டாக்கில் மிகப்பெரிய அளவில் விழாவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. காலை 11 மணிக்கு தொடங்கும் நிகழ்வு ஒரு மணிநேரம் முன்னதாக காலை 10 மணிக்கே தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், திடீரென்று மோசமான வானிலை காரணமாக பிரதமர் மோடியின் பயணம் ரத்து செய்யப்பட்டது. மக்கள் மத்தியில் மேற்கு வங்காளத்தின் பாக்டோக்ராவிலிருந்து இருந்து காணொலி காட்சி மூலம் அவர் உரையாற்றியதாவது:-

சிக்கிம் இமயமலையின் மாநிலம் அது "நாட்டின் பெருமை" அந்த மாநிலத்தின் மக்கள் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளனர். கடந்த மாதம் பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து, இந்தியாவில் பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டவர்களுக்கு ஆபரேஷன் சிந்தூர் ஒரு சரியான பதிலடி. பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் நாடு ஒன்றுபட்டுள்ளது. இந்தியா வல்லரசாக மாற்றுவதற்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது. சிக்கிம் இயற்கைப் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரித்து வருகிறது, இது மாநிலத்திற்கு கிடைத்த ஒரு பெரிய சாதனை ஆகும். சிக்கிம் இயற்கை பாதுகாப்பில் முன்மாதிரியாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# கமல்ஹாசன் கருத்துக்கு சபாநாயகர் ஆதரவு

சென்னை, மே 30-

கமல்ஹாசன் கருத்து சரியானது என சபாநாயகர் அப்பாவு தெரிவித்துள்ளார்.

'நாயகன்' படத்தை தொடர்ந்து, அதாவது 38 வருடங்களுக்கு பிறகு மணிரத்னம் - கமல்ஹாசன் கூட்டணியில் 'தக் லைப்' படம் உருவாகி இருக்கிறது. வருகிற ஜூன் 5-ந்தேதி படம் திரைக்கு வருகிறது.இதன் பட விழாவில் கமல்ஹாசன், சிம்பு, திரிஷா, ஏ.ஆர்.ரகுமான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விழாவில் சிறப்பு விருந்தினராக கன்னட சினிமாவின் முன்னணி நடிகர் சிவராஜ்குமார் பங்கேற்றார்.

அப்போது கமல்ஹாசன் பேசும்போது, ''ராஜ்குமாருடைய குடும்பம் கன்னடத்தில் இருக்கும் எனது குடும்பம். தமிழில் இருந்து பிறந்தது கன்னடம். அதனால் தான் சிவராஜ்குமார் இங்கு வந்துள்ளார்'', என்று குறிப்பிட்டார். கமல்ஹாசனின் இந்த பேச்சுக்கு கர்நாடகாவில் கடும் எதிர்ப்பு கிளம்பி இருக்கிறது.

கமல்ஹாசனின் இந்த பேச்சுக்கு, கர்நாடகா முதல்-மந்திரி சித்தராமையா கண்டனம் தெரிவித்து, 'கமல்ஹாசனுக்கு கன்னட மொழி குறித்த வரலாறு தெரியவில்லை' என்று கூறியுள்ளார். அதேபோல் கர்நாடகா மாநிலத்தின் பா.ஜனதா தலைவர் விஜயேந்திராவும் கண்டனம் தெரிவித்து, 'கமல்ஹாசன் மன்னிப்பு கேட்க வேண்டும்' என்று வலியுறுத்தி உள்ளார்.

இந்தநிலையில் கமல்ஹாசன் கருத்து சரியானது என சபாநாயகர் அப்பாவு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, திராவிட குடும்பத்தின் முதல் மொழி தமிழ் எனவும், கன்னடம், தெலுங்கு உள்ளிட்ட மொழிகள் தமிழில் இருந்துதான் பிறந்துள்ளதாகவும் ராபர்ட் கால்டுவெல் ஆய்வு செய்து கூறியுள்ளார். கமல்ஹாசன் கருத்துக்கு ஆதாரங்கள் உள்ளன. அவரின் கருத்து சரியானது. என தெரிவித்தார்.

# பக்ரீத் பண்டிகை வரும் ஜூன் 7-ம் தேதி கொண்டாடப்படும்: அரசு தலைமை காஜி

சென்னை, மே 30-

பக்ரீத் பண்டிகை வருகிற 7-ந்தேதி கொண்டாடப்படும் என அரசு தலைமை காஜி அறிவித்துள்ளார்.

இஸ்லாமிய ஐம்பெரும் கடமைகளில் ஒன்று புனித ஹஜ் பயணம் ஆகும். புனித மெக்காவுக்குச் சென்று வர சக்தியுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் வாழ்நாளில் ஒருமுறையாவது ஹஜ் பயணம் செல்ல விரும்புவார்கள். இஸ்லாமிய மாதமான துல்ஹஜ் மாதம் 10-ம் நாள் இந்தக் கடமை நிறைவேறுகிறது.

அதே நாளில் உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்கள் பக்ரீத் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். ஹஜ் கடமை நிறைவேறுவதால் இது 'ஹஜ்ஜுப் பெருநாள்' என்றும், இறைவனின் கட்டளைக்கு ஏற்ப தன் மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அறுத்துப் பலியிட முயன்ற நபி இப்ராகீம் (அலை) அவர்களின் தியாகத்தை நினைவு கூரும் வகையில் 'தியாகத் திருநாள்' என்றும் அழைக்கப்படுகிறது.

'துல்ஹஜ் மாத பிறை நேற்று முன்தினம் (28-ந் தேதி) தென்பட்டதைத் தொடர்ந்து பக்ரீத் பண்டிகை வருகிற ஜூன் 7-ந் தேதி (சனிக்கிழமை) கொண்டாடப்படும்' என்று தமிழக அரசின் தலைமை காஜி அலுவலகம் அறிவித்துள்ளது. இதே தகவலை தமிழ்நாடு தவ்ஹீத் ஜமா அத் மாநில தலைமை ஹாஜி தாவூத் கைஸரும் வெளியிட்டுள்ளார்.

## இந்திய வீரருக்கு தங்கப்பதக்கம்

தென் கொரியாவில் 26வது ஆசிய தடகள சாம்பியன் ஷிப் நடக்கிறது.இந்தியா சார்பில் 58 பேர் உட்பட, 43 நாடுகளில் இருந்து 2000 வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். நேற்று நடந்த ஸ்டிபிள் சேஸ் ஓட்ட இறுதிப் போட்டியில் இந்தியா சார்பில் தேசிய அளவில் சாதனை படைத்த அவினாஸ் பங்கேற்றார். 3, 000 மீ., பிரிவில் பந்தய தூரத்தை 8 நிமிடம் 20 வினாடிகளில் கடந்த அவினாஸ் முதலிடம் பிடித்து தங்கம் வென்று நாட்டிற்கு பெருமை சேர்த்தார்.

கடந்த 36 ஆண்டுகளில் இந்த பதக்கத்தை வெல்லும் முதல் இந்தியர் என்ற பெருமை இவருக்கு கிடைத்து உள்ளது. இந்த தொடரில் இந்தியா இதுவரை 3 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலம் என 9 பதக்கங்களை பெற்றுள்ளது.

## ஆர்.சி.பி. அணிக்கு 7-வது இடம்

ஐ.பி.எல். போட்டிகள் 2008-ம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றன. இதில் மும்பை, சிஎஸ்கே தலா 5 கோப்பைகளை வென்றுள்ளன. 18-ஆவது சீசன்களின் லீக் போட்டிகள் முடிவடைந்த நிலையில், இன்று குவாலிஃபயர் 1-க்கான போட்டியில் ஆர்.சி.பி., பஞ்சாப் அணிகள் முல்லான்பூரில் மோதுகின்றன.

எலிமினேட்டர் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியும் குஜராத் டைட்டன்ஸ் அணியும் மோதுகின்றன. 18 ஆண்டுகளாக கோப்பையே வெல்லாத ஆர்.சி.பி. அணி இந்த முறை கோப்பையை வெல்லும் முனைப்பில் இருக்கிறது. லீக் போட்டிகளில் அசத்தும் ஆர்.சி.பி. அணிக்கு பிளே-ஆஃப்ஸ் போட்டிகளே எமனாக இருந்து வருகின்றன.

## 3-வது சுற்றில் சபலென்கா

கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டி பாரீஸ் நகரில் நடைபெற்று வருகிறது. உலகின் முதல் நிலை வீராங்கனையான சபலென்கா (பெலாரஸ்) 2-வது சுற்று ஆட்டத்தில் சுவிட்சர்லாந்தை சேர்ந்த ஜில் டீச்மேனை சந்தித்தார்.

இதில் சபலென்கா 6-3, 6-1 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று 3-வது சுற்றுக்கு தகுதி பெற்றார். இந்த வெற்றியை பெற அவருக்கு 1 மணி 19 நிமிட நேரம் தேவைப்பட்டது.

## நகராட்சி நிருவாகம் - குடிநீர் வழங்கல் துறை சார்பில்
# ரூ.571.92 கோடி மதிப்பிலான 49 முடிவுற்ற பணிகள் திறப்பு
## 16 புதிய பணிகளுக்கும் முதல்வர் ஸ்டாலின் அடிக்கல்



சென்னை, மே 30-

முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் மொத்தம் ரூ.571.92 கோடி மதிப்பிலான 49 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 16 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 50 வாகனங்களின் சேவைகளை தொடங்கி வைத்தார்.

முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 30 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் 11 முடிவுற்ற பணிகள், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 188 கோடியே 55 லட்சம் ரூபாய் செலவில் 3 முடிவுற்ற பணிகள் நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் சார்பில் 102 கோடியே 59 லட்சம் ரூபாய் செலவில் 19 முடிவுற்ற பணிகள், பேரூராட்சிகள் ஆணையரகத்தின் சார்பில் 77 கோடியே 7 லட்சம் ரூபாய் செலவில் 14 முடிவுற்ற பணிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் 60 கோடியே 58 லட்சம் ரூபாய் செலவில் 2 முடிவுற்ற கூட்டுக் குடிநீர் திட்டங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 59 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 9 புதிய திட்டப்பணிகள், நகராட்சி நிருவாகத் துறை சார்பில் 15 கோடியே 11 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2 புதிய திட்டப் பணிகள், பேரூராட்சிகள் ஆணையரகத்தின் சார்பில் 18 கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 19 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பிலான 50 புதிய வாகனங்களின் சேவைகளை தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மணலி மண்டலம், மாத்தூர், எம்.எம்.டி.ஏ., 59வது தெருவில் சென்னை தொடக்கப் பள்ளிக்கு புதியதாக பள்ளிக்கூடம் கட்டிடம் கட்டும் பணி, மாதவரம் மண்டலம், வார்டு-33, பாரதியார் தெரு சென்னை மேனிலை பள்ளியில் கூடுதலாக 2வது தளத்தில் 4 வகுப்பறைகள். 2 கழிப்பறைகள் கட்டும் பணி, திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு-71ல் மாதவரம் நெடுஞ்சாலையில் புதியதாக சென்னை பெண்கள் மேல்நிலை-சென்னை நடுநிலை பள்ளியில் வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டும் பணியை துவக்கி வைத்தார்.

கோடம்பாக்கம் மண்டலம், பகுதி-31, வார்டு-132ல் ரங்கராஜபுரத்தில் உள்ள சென்னை தொடக்கப் பள்ளி கட்டிடம் கட்டும் பணி, வளசரவாக்கம் மண்டலம், பகுதி34, வார்டு155-ல் உள்ள ஈஸ்வரன் கோயில் தெருவில் சென்னை ஆரம்ப பள்ளி கட்டும் பணி, தண்டையார் பேட்டை மண்டலம் வார்டு-46, பகுதி-11ல் உள்ள கல்யாணபுரம் சென்னை மேல்நிலை பள்ளியில் 40 வகுப்பறைகள் படிக்கட்டு மற்றும் கழிப்பறை கட்டும் பணி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-44, பெரம்பூர், புதிய காமராஜர் நகரில் உள்ள சென்னை நடுநிலை பள்ளியில் 20 வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் தளங்கள், கழி வறை மற்றும் அங்கான்வாடி-1,2 கட்டும் பணிகள், மணலி மண்டலம், காமராஜர் சாலை மற்றும் மாதவரம் மண்டலம், வேலம்மாள் நகர் ஆகிய இடங்களில் 3.06 கோடி செலவில் 2 புகையில்லா எரிமேடைக் கட்டிடங்கள் கட்டம் பணியை துவக்கி வைத்தார்.

அடையாறு மண்டலம், திருவள்ளுவர் நகர், 7வது குறுக்குத் தெருவில் 1.47 கோடி ரூபாய் செலவில் கபடி மைதானம் மற்றும் இறகுப்பந்து மைதானத்துடன் கூடிய உள்விளையாட்டு அரங்கம், பெண்கள் உடற்பயிற்சிக் கூடம் மற்றும் கிரிக்கெட் வீசுகளம், மாதவரம் மண்டலம், புத்தகரம், பரப்பன்குளத்தில் 1.40 கோடி ரூபாய் செலவில் புதிய பூங்கா என மொத்தம் 30.60 கோடி ரூபாய் முடிவுற்ற 11 திட்டப்பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

பெருங்குடி மண்டலம், கொட்டிவாக்கம், பக்கிங்ஹாம் கால்வாய் குறுக்கே கிழக்கு கடற்கரை சாலை மற்றும் பழைய மகாபலிபுரம் சாலையை இணைக்கும் வகையில் வெங்கடேசபுரம்-இளங்கோ நகரில் புதிய பாலம், பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே கிழக்கு கடற்கரை சாலை மற்றும் பழைய மகாபலிபுரம் சாலையை இணைக்கும் வகையில் காமராஜர் சாலை. வீரமணி சாலை, பாலவாக்கம் பகுதியில் புதிய பாலம், சோழிங்கநல்லூர் மண்டலம், பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே கிழக்கு கடற்கரை சாலை மற்றும் பழைய மகாபலிபுரம் சாலையை இணைக்கும் வகையில் பாண்டியன் தெரு, அண்ணா நகர், துரைப்பாக்கம் பகுதியில் புதிய பாலம், என 21.03 கோடி மதிப்பீட்டில் 3 புதிய பாலங்களை திறந்து வைத்தார்.

ராயபுரம் மண்டலம், ஆதித்தனார் சாலை, புதுப்பேட்டை டி-டிப்போவில் 5.40 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அலுவலகக் கட்டிடம்; திருவொற்றியூர் மண்டலம், பட்டினத்தார் சாலையில் 9.78 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வணிக வளாகக் கட்டிடம், கோடம்பாக்கம் மண்டலம், ஜாபர்கான் பேட்டை, பிள்ளையார் கோயில் தெரு சென்னை மேல்நிலைப் பள்ளி, தண்டையார்பேட்டை மண்டலம், கண்ணன் தெரு-புத்தா தெரு சென்னை நடுநிலைப் பள்ளி, பெருங்குடி மண்டலம், குப்பம் பிரதான சாலை சென்னை தொடக்கப் பள்ளி கட்டிடங்கள் கட்டும் பணி 13.89 கோடி மதிப்பீட்டிலும் மாதவரம் மண்டலம் தட்டாங்குளத்தில் 9.50 கோடி மதிப்பீட்டில் மண்டல அலுவலகக் கட்டிடம் கட்டும் பணி என மொத்தம் 59.60 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 9 புதிய திட்டப்பணிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் அமுக்கப்பட்ட இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் 6 நீர் தெளிக்கும் வாகனங்கள்; பழுதடைந்த மற்றும் ஆபத்தான நிலையில் உள்ள மரங்களின் கிளைகளை அகற்றி சீர்செய்யும் வகையில், 6 ஹைட்ராலிக் இயந்திரங்கள், அலுவலர்கள் களப்பணிகளை மேற்கொள்ளும் வகையில் 16 ஆய்வு வாகனங்களை துவக்கி வைத்தார். தூய்மைப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் 4 இயந்திரப் பெருக்கி வாகனங்கள், சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரை கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லும் வகையில் 4 கல்விச் சுற்றுலா பேருந்துகள் டீசல் மூலம் இயங்கும் 12 சிறிய அளவிலான இயந்திரப் பெருக்கி வாகனங்கள், பேட்டரி மூலம் இயங்கும் 2 சிறியரக இயந்திரப் பெருக்கி வாகனங்கள் என மொத்தம் 19.44 கோடி ரூபாய் மதிப்பிலான 50 புதிய வாகனங்களின் சேவைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பள்ளிக்கரணை விரிவான பாதாள சாக்கடை திட்டம் -மயிலை பாலாஜி நகர், காமகோடி நகர் மற்றும் வள்ளல் பாரி நகர்; முகலிவாக்கம் விரிவான பாதாள சாக்கடை திட்டம்-மணப்பாக்கம் முகலி வாக்கம் பிரதான சாலை கழிவுநீரேற்று நிலையத்தின் பகுதி வெள்ளோட்டம். மடிப்பாக்கம் பகுதிக்கான விரிவான பாதாள சாக்கடை திட்டம்-அண்ணா நகர், ராம் நகர் தெற்கு விரிவாக்க பகுதி மற்றும் தந்தை பெரியார் நகர் என மொத்தம் 188 கோடியே 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 முடிவுற்ற விரிவான பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

# படுகொலை செய்யப்பட்ட பழங்குடியின பெண் குடும்பத்தினருக்கு ராகுல் ஆறுதல்

போபால், மே 30-

ம.பி.யில் பலாத்காரம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பழங்குடியின பெண் குடும்பத்தினருக்கு ராகுல் காந்தி ஆறுதல் கூறினார்.

மத்திய பிரதேச மாநிலம் காண்ட்வா மாவட்டத்தில் சில தினங்களுக்கு முன்பு, 45 வயதான பழங்குடியின பெண், 2 பேரால் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். இதில் அதிக ரத்தப்போக்கு ஏற்பட்டதில் மறுநாள் அந்த பெண் பரிதாபமாக இறந்தார். இதில் சம்பந்தப்பட்ட 2 பேர் போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் காங்கிரஸ் கட்சியின் பழங்குடியின பிரிவு தலைவர் விக்ராந்த் பூரியா, பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்தினரை நேற்று நேரில் சந்தித்தார். அப்போது அவர், காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல்காந்தியை செல்போனில் வீடியோ அழைப்பில் தொடர்பு கொண்டு, பாதிக்கப்பட்ட குடும்பத்தினரிடம் பேச வைத்தார். ராகுல் காந்தி, அவர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார். மேலும் இந்த விஷயத்தில் தன்னால் ஆன உதவிகளை செய்வதாக வாக்குறுதி அளித்தார். அதுபற்றிய வீடியோ சமூக வலைத்தளத்தில் வெளியிடப்பட்டது.

பின்னர், விக்ராந்திடம் பேசிய ராகுல்காந்தி, "இந்த விவகாரத்தை தொடர்ந்து கவனித்து, அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்யவும், குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கவும்" உத்தரவிட்டார். இந்த விவகாரம் குறித்து ராகுல்காந்தி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியது குறிப்பிடத்தக்கது.

# பா.ம.க. நிர்வாகிகளுடன் அன்புமணி இன்று சந்திப்பு

சென்னை, மே 30-

பா.ம.க. நிர்வாகிகளை சென்னையில் அன்புமணி இன்று சந்திக்க உள்ளார்.

திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் நேற்று பேட்டி அளித்தார். அப்போது அவர் அன்புமணி மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். இந்த நிலையில் கட்சி நிர்வாகிகள் யாரும் தன்னை சந்திக்க வர வேண்டாம் என அன்புமணி வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்நிலையில், ராமதாஸின் சரமாரி குற்றச்சாட்டுக்கு மத்தியில் பா.ம.க. நிர்வாகிகளுடன் இன்று அன்புமணி ராமதாஸ் ஆலோசனை நடத்துவதாக கூறப்பட்டுள்ளது. அதன்படி, சென்னை சோழிங்கநல்லூரில் உள்ள பனையூர் அலுவலகத்தில் நாளை முதல் ஞாயிறு வரை பா.ம.க. மாவட்ட மற்றும் மாநில நிர்வாகிகளை பா.ம.க. தலைவர் அன்புமணி சந்திக்கிறார்.

மாவட்டம் தோறும் புதிய உறுப்பினர் அட்டைகளை அன்புமணி வழங்க உள்ளதாகவும் கூறப்படுகிறது. ராமதாஸ் கடுமையாக விமர்சித்த நிலையில் அன்புமணி கட்சிப் பணிகளில் தீவிரம் காட்டி வருகிறார்.

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு

# அதிக நிதி கொடுத்து தமிழ்நாடு முதல்வர் சிறப்பாக செயல்படுகிறார்

## அமைச்சர் அர.சக்கரபாணி புகழாரம்



**ஒட்டன்சத்திரம், மே 30-**

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், சென்னையிலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் ரூ.21.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட காந்தி மார்க்கெட் வணிக வளாக கடைகள், ரூ.18.64 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோயில் மலை கிரிவலப்பாதை ஆகியவற்றை திறந்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, ஒட்டன்சத்திரத்தில் நடைபெற்ற விழாவில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், தலைமையில், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம் முன்னிலையில் ஒட்டன்சத்திரம் காந்தி மார்க்கெட் வணிக வளாகம் உள்ளிட்ட புதிய கட்டடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசுகையில்,

ஒட்டன்சத்திரம் நகராட்சியை தூய்மையான நகராட்சியாக மாற்றும் வகையில் ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் குப்பைக்கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் குப்பைகளை சேகரிக்க வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. சாக்கடை கழிவுநீர், ஆறு, குளம் போன்ற நீர்நிலைகளில் கலப்பதால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்கும் வகையில் சாக்கடை கழிவுநீர் சுத்திகரிக்கும் திட்டம் ரூ.5.52 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது. ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதிகளில் ரூ.30.00 கோடி மதிப்பீட்டில் சாலைகள் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. கழிவுநீர் சாக்கடைகள் ஏற்கனவே ரூ.13.00 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன.

மேலும், ரூ.23.00 கோடி மதிப்பீட்டில் சாக்கடைகள் சீரமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

இந்தப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் 440 மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

முதல்வர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் சாலைகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஊராட்சி ஒன்றிய சாலைகள் நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு சாலைகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களுக்குத் தேவையான, உண்ண உணவு, இருக்க இடம், உடுக்க உடை, குடிநீர், சுகாதாரம், கல்வி, சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

காய்கறி மார்க்கெட்டில் கடைகள் பெற்றுள்ள வியாபாரிகள் நல்ல முறையில் வியாபாரத்தில் வளர்ந்து மென்மேலும் வளர்ச்சியடைய வேண்டும்என பேசினார். இவ்விழாவில் நகராட்சிகளின் மண்டல இயக்குநர் முஜிப்பூர்ரகுமான், பழனி வருவாய் கோட்டாட்சியர் கண்ணன், நகராட்சி தலைவர் திருமலைச்சாமி, துணைத்தலைவர் வெள்ளைச்சாமி, ஆணையாளர் ஸ்வேதா, நகராட்சி பொறியாளர் சுப்பிரமணிய பிரபு, சுகாதார ஆய்வாளர் ராஜமோகன், கணக்கர் சரவணன், வருவாய் ஆய்வாளர் விஜய் பால்ராஜ், மேலாளர் ரவி, உதவியாளர் அருள் முருகன் வட்டார வளர்ச்சி அலுவலர் காமராஜ், மாவட்ட அவைத் தலைவர் மோகன் ஒன்றிய செயலாளர்கள் ஜோதீஸ்வரன், பாலு, செயற்குழு உறுப்பினர் கண்ணன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் முருகானந்தம், சிவபாக்கியம் ராமசாமி, ராமகிருஷ்ணன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாண்டியராஜன் உள்ளிட்ட நகர் மன்ற உறுப்பினர்கள், காய்கறி மார்க்கெட் சங்க நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# மதுரை மாநகராட்சி மேயரின் கணவர் தி.மு.க.வில் இருந்து நீக்கம்

**மதுரை, மே 30-**

மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணியின் கணவர் பொன் வசந்த், தி.மு.க.வில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார்.

மதுரை மாநகராட்சி தி.மு.க. மேயராக இந்திராணி இருந்து வருகிறார். இவர் அமைச்சர் பிடிஆர்.பழனிவேல் தியாகராஜனின் தீவிர ஆதரவாளராக செயல்பட்டு வந்தார். மேயர் இந்திராணி பெயரளவுக்கு மேயராகவும், நிழல் மேயராக அவரது கணவர் பொன் வசந்த் செயல்பட்டு வருவதாகவும், மாநகராட்சி நிர்வாகப் பணிகளில் தலையிடுவதோடு அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதாகவும் குற்றச்சாட்டு இருந்து வந்தது.

இந்நிலையில் தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன், மேயர் இந்திராணி கணவர் பொன்வசந்தை அனைத்து பொறுப்புகளில் இருந்தும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்படுவதாக அறிவித்துள்ளார். இதுகுறித்து தி.மு.க. மூத்த நிர்வாகிகள் சிலர் கூறியதாவது: பொன் வசந்த், அமைச்சர் பிடி.ஆர்.பழனிவேல் தியாகராஜனின் ஆதரவாளராக இருந்து வந்தார். இதனால் தனது மனைவி இந்திராணியை மேயராக்கினார். இதற்கிடையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் பழனிவேல் தியாகராஜன், திடீரென்று நிதி அமைச்சர் பொறுப்பில் இருந்து தகவல் தொழில்நுட்ப அமைச்சராக மாற்றப்பட்டார். மேலும் கட்சி பொறுப்பில் இருந்தும் பழனிவேல் தியாகராஜன், தன்னை விடுவித்துக் கொண்டார். இந்த வசதியைப் பயன்படுத்தி மேயர் இந்திராணி கணவர் பொன்வசந்த், பணிகளை டெண்டர் விடுவது, வார்டுகளுக்கு பணி ஒதுக்குவது என அனைத்து விவகாரங்களிலும் முழுமையாக தலையிட ஆரம்பித்தார்.



இந்தச் சூழலில் மதுரை வரும் முதல்வரை வரவேற்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஆலோசனைக் கூட்டம், அமைச்சர்கள் பி.மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், மாநகரச் செயலாளர் தளபதி, புறநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் மணிமாறன் ஆகியோர் தலைமையில் கடந்த 23-ம் தேதி காலை வெள்ளிக்கிழமை நடந்தது. இதே நாளில், இதே நேரத்தில் மாநகராட்சி கூட்டத்திற்கு மேயர் இந்திராணி ஏற்பாடு செய்திருந்தார். இந்த கூட்டத்தில், அ.தி.மு.க., சிபிஎம், தேமுதிக, விடுதலை சிறுத்தைகள் கவுன்சிலர்கள் துணையுடன் கூட்டத்தை நடத்தி தீர்மானத்தையும் நிறைவேற்றி வெற்றிகரமாக கூட்டத்தை நடத்தி விட்டனர். இது, அமைச்சர்கள், கட்சி நிர்வாகிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது. இதுகுறித்து கட்சித் தலைமைக்கு புகார்கள் சென்றன. அதனால், முதற்கட்ட நடவடிக்கையாகவே தற்போது மேயர் கணவர் பொன் வசந்த் மீது மட்டும் நடவடிக்கை எடுத்து கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அடுத்தக்கட்டமாக மேயர் இந்திராணி மீதும் நடவடிக்கை பாயலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

# போடி அருகே தொழிலாளியை தாக்கியவர்கள் மீது வழக்கு

**போடி, மே 29-**

போடி அருகே, கோயிலை சொந்தம் கொண்டாடியவரை தாக்கி நகை அறுத்து சென்றவர்கள் மீது போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரிக்கின்றனர். போடி அருகே சில்லமரத்துப்பட்டியில் கண்டியம்மன் கோயில் உள்ளது. இந்த கோயிலை இதே ஊரைச் சேர்ந்த துக்கையண்ணன் மகன் சுரேஷ் (42) என்பவர் தனது குடும்பத்திற்கு சொந்தமானது என கூறியுள்ளார். இதற்கு இவரது உறவினர்களான சில்லமரத்துப்பட்டியை சேர்ந்த கணேசன், கூடலிங்கம் மற்றும் சிலர் தங்கள் சமுதாயத்திற்கு சொந்தமானது என கூறியுள்ளனர். இதில் ஏற்பட்ட சண்டையில் சுரேசை தாக்கி, அவரது கழுத்திலிருந்த தங்க நகையை அறுத்தும், வீட்டு படிகளை சேதப்படுத்தியதாகவும் கூறப்படுகிறது. சுரேஷ் கொடுத்த புகாரின் பேரில் போடி தாலுகா காவல் நிலைய போலீஸார் கணேசன், கூடலிங்கம் மற்றும் சிலர் மீது வழக்கு பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

# 9 துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்

**சென்னை, மே 30-**

காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக, பாம்பன், தூத்துக்குடி உள்ளிட்ட 9 துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. இந்த காற்றழுத்த தாழ்வு மண்டம் மேற்கு வங்காளம் - வங்கதேசம் இடையே சாகர் தீவுகள் - கேப்புராவிற்கு இடையே நேற்று மாலை கரையை கடந்தது.

இந்த நிலையில், காற்றழுத்த தாழ்வு மண்டலம் எதிரொலியாக, 9 துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டிருந்தது. பாம்பன், தூத்துக்குடி துறைமுகங்களில் 3ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டும், சென்னை, எண்ணூர், காட்டுப்பள்ளி, கடலூர், நாகை துறைமுகங்களில் ஒன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டும் ஏற்றப்பட்டுள்ளது. அதேபோல, புதுச்சேரி, காரைக்கால் துறைமுகங்களிலும் ஒன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டிருந்தது.

# ஏர்வாடி தர்கா மத நல்லிணக்க சந்தனக்கூடு திருவிழா நிறைவு

**ராமநாதபுரம், மே 30-**

ஏர்வாடி தர்காவின் மத நல்லிணக்க சந்தனக்கூடு திருவிழா நிறைவடைந்தது.

ராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடி தர்காவில் 851-வது ஆண்டு மத நல்லிணக்க சந்தனக்கூடு திருவிழா கடந்த மாதம் 29-ந் தேதி தர்கா ஹக்தார் நிர்வாக சபையினர் தலைமையில் ஆலிம் உலமாக்கள் முன்னிலையில் தொடங்கியது. 9-ந் தேதி ஏர்வாடி முஜாஹிர் நல்ல இபுராஹீம் மகாலில் இருந்து யானை, குதிரை, ஒட்டகங்களுடன் கொடி ஊர்வலம் தர்காவை வந்தடைந்தது.

ராமநாதபுரம் மாவட்ட டவுன் காஜி தலைமையில் சிறப்பு பிரார்த்தனை செய்யப்பட்டு இரவு 7 மணி அளவில் கொடியேற்றம் நடைபெற்றது. 21-ந் தேதி மாலை மத நல்லிணக்க சந்தனக்கூடு திருவிழா தொடங்கி மறுநாள் அதிகாலை தர்கா மக்பராவில் சந்தனம் பூசும் நிகழ்ச்சி நடந்தது. அதை தொடர்ந்து நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் ராமநாதபுரம் மாவட்ட காஜி சலாஹுத்தீன் ஆலிம் ஜமாலி பாஷில் உமரி தலைமையில் உலக நன்மைக்காகவும் அமைதிக்காகவும் சிறப்பு பிரார்த்தனை செய்யப்பட்டு கொடி இறக்கத்துடன் விழா நிறைவடைந்தது. அதை தொடர்ந்து மவுலீது ஓதி, 4 ஆயிரம் கிலோ அரிசியில் நெய் சோறு நேர்ச்சையாக வழங்கப்பட்டது. இதில் தமிழகம் மட்டுமின்றி அக்கம், பக்கத்து மாநிலத்தில் இருந்தும் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

விழா ஏற்பாடுகளை ஏர்வாடி தர்கா ஹக்தார் நிர்வாக சபை தலைவர் அகமது இப்ராஹிம், செயலாளர் சித்திக் லெவ்வை, உதவி தலைவர் முகம்மது சுல்தான் மற்றும் நிர்வாக சபையினர் செய்திருந்தனர். பாதுகாப்பு ஏற்பாடுகளை ராமநாதபுரம் மாவட்ட சூப்பிரண்டு சந்தீஷ் உத்தரவின் பேரில் கீழக்கரை துணை சூப்பிரண்டு பாஸ்கரன் தலைமையில் போலீசார் செய்திருந்தனர்.

# புளியூர் நத்தம் ஷேக்பரீத் ஒலியுல்லா என்ற சக்கரைபாவா சந்தனக்குடம்



**ஒட்டன்சத்திரம், மே 30-**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், புளியூர்நத்தம் ஊராட்சிக்குட்பட்ட குளிப்பட்டியில் மஹான் ஷேக்பரீத் ஒலியுல்லா (எ) சக்கரைபாவா அவர்களின் சந்தனக்குடம் (எ) உருஸ் விழா நேற்றுமுன்தினம் மாலைகொடி யேற்றத்துடன் தொடங்கியது. வருகிற 13-ம் தேதி வெள்ளி அன்று நடைபெற உள்ள சந்தனக்குடம் என்ற உருஸ் விழாவில் வாசனை மாலை போர்வை ஊர்வலம், சந்தனம் வழங்குதல் உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெறவுள்ளது. அன்று இரவு இசைஅமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் அவர்களின் சகோதரி அல் ஹாஜியா ஏ.ஆர்.ரைஹானா மற்றும் திருச்சி டி.எஸ்.எஸ். கென்னடி ஆகியோர்களின் இஸ்லாமிய இன்னிசை நிகழ்ச்சி நடைபெறுகிறது. வருகின்ற ஜூலை 18.ம் தேதி புதன் அன்று புனித கொடியிறக்கம் நடைபெறும் என்றும் பிறகு (துஆஎனும்) பிரார்த்தனை செய்த பின்புதப்ரூக் வழங்கப்படும் என தர்காவின் இவ்வாண்டு ஹக்தார் ஹசன்பரீத் தெரிவிததுள்ளார்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**



மதுரை பழங்காநத்தம் டி.வி.எஸ்.நகர் மற்றும் ஜெய்ஹிந்துபுரம் பகுதிகளை இணைக்கும் வகையில் ரயில்வே மேம்பாலத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையிலிருந்து காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து அமைச்சர் மூர்த்தி பார்வையிட்டார். உடன் கலெக்டர் சங்கீதா, ஆணையாளர் சித்ரா, பூமிநாதன் எம்.எல்.ஏ ஆகியோர் உள்ளனர்.

# உழவரைத் தேடி வேளாண்மை-உழவர் நலத்துறை திட்டம்: விருதுநகர் கலெக்டர் ஜெயசீலன் பங்கேற்பு



**விருதுநகர், மே 30-**

திருவில்லிபுத்தூர் வட்டம் டி.மானகசேரி கிராமத்தில் நடைபெற்ற "உழவரைத் தேடி வேளாண்மை உழவர் நலத்துறை திட்டம்" முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜெயசீலன் கலந்து கொண்டார்.

அனைத்து வட்டாரங்களில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது மற்றும் நான்காவது வெள்ளிக் கிழமைகளில், நான்கு முகாம்கள் வீதம் தமிழ்நாடு முழுவதும் 17,116 கிராமங்களில் முகாம்கள் நடைபெறும் வகையில் இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அதன்படி, விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 11 ஊராட்சி ஒன்றியங்களில் உழவரைத்தேடி வேளாண்மை உழவர் நலத்துறை திட்டம்" முகாம்கள் நடைபெற்றது.

திருவில்லிபுத்தூர் வட்டம் டி.மானகசேரி கிராமத்தில் நடைபெற்ற முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயசீலன் கலந்து கொணடு, இம்முகாமில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு குதிரைவாலி செயல்விளக்கத்திடல் இடுபொருட்கள், சிறுதானிய நுண்ஊட்ட உரம், மழைதூவுவான், தென்னங்கன்று விநியோகம், உயிர் உரம் விநியோகம், கால்நடைக்கான தாதுஉப்புகள் உள்ளிட்டவைகளை வழங்கினார்.

இந்த முகாமில் வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொண்டு புதிய தொழில்நுட்பங்கள், அரசு மானியத்திட்டங்கள், மானிய விலையில் இடுபொருட்கள் வழங்குதல், உயிர்ம வேளாண்மை சாகுபடி வழிகாட்டுதல், நவீன வேளாண் தொழில் நுட்பங்கள், இயந்திரங்கள், வேளாண் கருவிகள், மண்வள அட்டை, நுண்ணீர் பாசனத்திட்டம், மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல், வீட்டுக்காய்கறி தோட்டம், கால்நடைகள் பராமரிப்பு, பண்ணைக் குட்டை களில் மீன் வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு, ஒருங்கிணைந்த பண்ணையம், கூட்டுறவு சங்கங்களில் பயிர் கடன்கள்; குறித்து விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டு செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. இம்முகாம்கள் மூலம் பல்வேறு துறைகளின் ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்த தகவல்களை பெற்று விவசாயம் செய்வதன் மூலம் வேளாண் உற்பத்தி பெருகுவதோடு விவசாயிகளின் வாழ்வாதாரமும் மேம்படும்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குநர் விஜயா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் செந்தில்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் நாச்சியார் அம்மாள், தோட்டக்கலை துணை இயக்குநர் சுபா வாசுகி, வேளாண்மைப் பொறியியல் துறை கண்காணிப்புப் பொறியாளர் இந்திரா, விருதுநகர் விற்பனைக்குழு செயலாளர் வேலுச்சாமி, வேளாண்மை உதவி இயக்குநர் தனலட்சுமி, உதவி இயக்குநர் முருகன், பேராசிரியர் பாலசுப்பிரமணியம், உட்பட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளிக்காட்சி மூலம் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மூலம் உழவரைத்தேடி வேளாண்மை உழவர் நலத்துறை என்னும் திட்டத்தை தொடங்கி வைத்தையொட்டி இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியம் செல்வநாயகபுரம் கிராமத்தில் கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் நிகழ்ச்சியை பொதுமக்களுடன் பங்கேற்று பார்வையிட்டு பேசினார்.

ஸ்ரீவில்லிபுத்தூரில்

# வீடு புகுந்து மூதாட்டியை தாக்கி 3 பவுன் நகை பறிப்பு-2 பேர் கைது

**விருதுநகர், மே 30-**

ஸ்ரீவில்லிபுத்தூர் ரெங்கநாதபுரம் நடுத்தெருவில் வசிப்பவர் விதவை மூதாட்டி மாடத்தியம்மாள் வயது 90 இவர் தனது வீடு அருகே வசிக்கும் மகள் சாந்தி வயது 60 என்பவர் பராமரிப்பில் வசித்து வருகிறார். சாந்தி தன் தாய் மாடத்தியம்மாளுக்கு காலை மதியம் வேலைகளில் உணவு தருவது வழக்கம்.

இந்தநிலையில் சம்பவத்தன்று மதியம் மாடத்தியம்மாள் மட்டும் வீட்டில் தனியாக இருந்த போது மஞ்சள் மற்றும் கருப்பு நிறம் பனியன் அணிந்திருந்த இரண்டு பேர் வீடு புகுந்து மாடத்தியம்மாள்ளை கீழே தள்ளி விட்டு அவர் அணிந்திருந்த ரூபாய் 92. ஆயிரம் மதிப்புள்ள மூன்று பவுன் தங்க சங்கிலியை பறித்து மேலும் பீரோவில் இருந்த ரூபாய் 2 ஆயிரம் ரொக்க பணத்தை எடுத்துக் கொண்டு ஓடி விட்டனர். இது குறித்து ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் குற்றப்பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து சம்பவத்தில் ஈடுபட்டதாக ஸ்ரீவில்லிபுத்தூர் திருவண்ணாமலை சன்னதி தெருவை சேர்ந்த கணேசன் மகன் அரவிந்த் வயது 23 மேட்டு நாயுடு தெருகோவிந்தராஜ் மகன் அழகர் வயது 43 ஆகிய இருவரையும் கைது செய்து கொள்ளடிக்கப்பட்ட நகை மற்றும் பணம் ஆகியவற்றை கைப்பற்றி இச்சம்பவத்தில் ஈடுபட்ட மேலும் இருவரை போலீசார் தேடி வருகின்றனர் .




முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 30 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் 11 முடிவுற்ற பணிகள் உள்ளிட்ட பல்வேறு முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 59 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 9 புதிய திட்டப்பணிகள் உள்ளிட்ட புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், நாமக்கல் மாவட்டத்தில் 424 கோடியே 38 லட்சம் ரூபாய் செலவில் நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தப்பட்ட மல்லியக்கரை - இராசிபுரம் - திருச்செங்கோடு - ஈரோடு சாலை, மதுரை மாவட்டம், பழங்காநத்தத்தில் ரயில்வே கடவிற்கு மாற்றாக 68 கோடியே 38 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ.வேலு, பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பழனி, ராமேஸ்வரம் உள்ளிட்ட 11 நகராட்சிகளின் தரம் உயர்வு

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு

**சென்னை, மே 30-**

பழனி, ராமேஸ்வரம் உள்ளிட்ட 11 நகராட்சிகளின் தரத்தை உயர்த்தி தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

11 நகராட்சிகளின் தரத்தை உயர்த்தி தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இதன்படி திருச்செங்கோடு, உடுமலைப்பேட்டை, பழனி சிறப்புநிலை நகராட்சிகளாகவும், நந்திவரம்-கூடுவாஞ்சேரி, ராமேஸ்வரம், பல்லடம் தேர்வுநிலை நகராட்சிகளாவும், மாங்காடு, குன்றத்தூர், வெள்ளக்கோவில், அரியலூர், அம்பாசமுத்திரம் ஆகியவை முதல்நிலை நகராட்சிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலர் தா.கார்த்திகேயன் வெளியிட்ட உத்தரவில், "சிறப்புநிலை நகராட்சியாகத் தரம் உயர்த்த அதன் ஆண்டு வருவாய் ரூ.15 கோடிக்கு மேலாகவும், தேர்வுநிலை நகராட்சியாகத் தரம் உயர்த்த ரூ.15 கோடி வரையிலும், முதல்நிலை நகராட்சியாக நிலை உயர்த்த ரூ. 9 கோடிவரையிலும், இரண்டாம் நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்த ரூ.6 கோடிக்கு மிகாமலும் வருவாய் அளவு இருக்க வேண்டும்.

இந்நிலையில், திருச்செங்கோடு, உடுமலைப்பேட்டை, பழனி ஆகிய மூன்று தேர்வு நிலை நகராட்சிகள் சிறப்பு நிலை நகராட்சிகளாகவும், நந்திவரம்-கூடுவாஞ்சேரி, பல்லடம், ராமேசுவரம் ஆகிய முதல்நிலை நகராட்சிகள் தேர்வு நிலை நகராட்சிகளாகவும், மாங்காடு, குன்றத்தூர், வெள்ளக்கோவில், அரியலூர், அம்பாசமுத்திரம் ஆகிய இரண்டாம் நிலை நகராட்சிகள் முதல்நிலை நகராட்சிகளாகவும் தரம் உயர்த்தப்படுகின்றன.

இதற்கான பரிந்துரைகளை அரசுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரகம் அளித்துள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அறிக்கையை திருப்பி அனுப்பவில்லை:

# கீழடி அகழாய்வு குறித்து மத்திய அரசு விளக்கம்

**புதுடெல்லி, மே 30-**

கீழடி அகழாய்வு அறிக்கை விவகாரம் தொடர்பாக மத்திய அரசு விளக்கமளித்துள்ளது.

கீழடி அகழாய்வு அறிக்கையை மத்திய அரசு திருப்பி அனுப்பவில்லை என்பது உண்மைக்கு புறம்பான செய்தி என மத்திய கலாச்சார அமைச்சகம் மறுப்பு தெரிவித்து விளக்கம் கொடுத்துள்ளது. அந்த அறிக்கையை பரிசோதித்த வல்லுநர்கள் குழு இதில், சில திருத்தங்களை மேற்கொள்ளுமாறு கீழடி அகழாய்வு குழுவுக்கு மத்திய தொல்லியல் துறை திரும்ப அனுப்பி வைத்தது. இந்த நிலையில், கீழடி அறிக்கை விவகாரத்தில் மத்திய அரசு நேற்று (மே 29) விளக்கம் அளித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், " சிவகங்கை மாவட்டம் கீழடியில் 2013 முதல் 2016 வரை இரண்டு கட்டங்களாக தொல்லியல் ஆய்வு, தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளோடு 982 பக்கங்கள் கொண்ட அறிக்கையை கடந்த 2023ம் ஆண்டு ஜனவரி மாதம் மத்திய அரசிடம் அமர்நாத் ராமகிருஷ்ணன் சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கை இப்போது வரை பொதுவெளியில் வெளியிடப்படாமல் உள்ள நிலையில், அகழாய்வின்போது கண்டறியப்பட்ட தொல்பொருள் சின்னங்கள் தமிழ்நாடு அரசிடமும் ஒப்படைக்கவில்லை. கீழடி அகழாய்வு அறிக்கையை இந்திய தொல்லியல் துறை வெளியிட ஆர்வம் காட்டவில்லை என விமர்சனங்கள் எழுகிறது. சமீப தினங்களுக்கு முன்னர், 2023 ஜனவரி மாதம் மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை மீண்டும் மத்திய அரசு திருப்பி அனுப்பியதாக தகவல்கள் வெளியானது. இதற்கு அரசியல் கட்சியின் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இது இந்திய தொல்லியல் துறையை மோசமாக சித்தரிக்கும் நோக்கம் கொண்டவை.

அகழ்வாராய்ச்சியாளர்களால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, அவை பல்வேறு துறை நிபுணர்களுக்கு அனுப்பப்படுகின்றன. அவர்கள் அறிக்கைகளை சரிபார்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். துறை வல்லுநர்களால் பரிந்துரைக்கப்பட்ட பல்வேறு மாற்றங்கள் அகழ்வாராய்ச்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு இறுதியாக வெளியீட்டிற்காக மீண்டும் சமர்ப்பிக்கப்படுகின்றன. பின்னர் இவை இந்திய தொல்பொருள் ஆய்வு நிறுவனத்தின் நினைவுக் குறிப்புகளாக வெளியிடப்படுகின்றன.

கீழடி அறிக்கையிலும் இதே நடைமுறை பின்பற்றப்பட்டது. அதில் அறிக்கை நிபுணர்களுக்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்டது. அதன்படி, கீழடியின் அகழ்வாராய்ச்சியாளரால் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு அறிக்கையில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கான நிபுணர்களின் பரிந்துரைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவர் தற்போது வரை திருத்தத்தை மேற்கொள்ளவில்லை. கீழடி ஆய்வு அறிக்கையை வெளியிடுவதில் இந்திய தொல்லியல் துறை ஆர்வம் காட்டவில்லை என்பது ஒரு கற்பனை கதை. இது இந்திய தொல்லியல் துறையை மோசமான கையில் சித்தரிக்கக் கூடிய நோக்கத்தை கொண்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



சென்னை, அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் நேற்று பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் அவை தலைவர் தமிழ்மகன் உசேன், முனுசாமி, திண்டுக்கல் சீனிவாசன், நத்தம் விஸ்வநாதன், எஸ்.பி. வேலுமணி, ஆர்.பி.உதயகுமார், மகளிர் அணி செயலாளர் பா.வளர்மதி, விஜயபாஸ்கர், செல்லூர் ராஜூ, கே.டி.ராஜேந்திரபாலாஜி , தளவாய் சுந்தரம் மற்றும் ராஜன் செல்லப்பா, ஜக்கையன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மாநிலங்களவைத் தேர்தல் வேட்பாளர்கள் குறித்து

# இ.பி.எஸ். தலைமையில் அ.தி.மு.க. ஆலோசனை

**சென்னை, மே 30-**

மாநிலங்களவைத் தேர்தல் வேட்பாளர்கள், கட்சியின் வளர்ச்சிப் பணிகள் குறித்து அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.


சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நேற்று நடைபெற்ற இந்த கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள், மாவட்டப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். இன்றும் இந்த கூட்டம் நடைபெற உள்ளது.

அடுத்தாண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடக்கவுள்ளதையடுத்து கட்சிப் பணிகள், தேர்தல் பணிகள் குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக தெரிகிறது. அ.தி.மு.க.வின் மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கு பலரும் போட்டி போடுவதாகக் கூறப்படும் நிலையில், அதுதொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. கடந்த மக்களவைத் தேர்தலில் கூட்டணியில் இருந்த தே.மு.தி.க.வுக்கு ஒரு மாநிலங்களவை சீட் வழங்கப்படும் என்று எடப்பாடி பழனிசாமி உறுதி அளித்ததாகக் கூறப்படும் நிலையில், தே.மு.தி.க.வுக்கு சீட் ஒதுக்கப்படுமா என்ற எதிர்பார்ப்பும் எழுந்துள்ளது.

தமிழகத்தில் வருகிற ஜூன் 19 ஆம் தேதி மாநிலங்களவைத் தேர்தல் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது. இதில் அ.தி.மு.க.வுக்கு 2 இடங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



சென்னை வியாசர்பாடி சத்தியமூர்த்தி நகரில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டு மாநகராட்சி பள்ளியில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு அரசு சார்பில் ரூபாய் 8,000 ரொக்கமும், 10 கிலோ அரிசி, வேஷ்டி, புடவையும் மற்றும் கட்சி சார்பில் ரூபாய் 42,000 ரொக்கமும், 26 கிலோ அரிசி, பெட்ஷீட், புடவை, லுங்கி, இரவு உடை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார். இந்நிகழ்வில் மேயர் ஆர்.பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி., ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அலுவலர்கள் உடனிருந்தனர்.




சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக மாநாட்டுக் கூட்டரங்கில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நடைபெற்ற 'அறிஞர்கள் அவையம்' நிகழ்வினைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் ராஜாராமன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் பாலகிருஷ்ணன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அருள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் கோபிநாத் ஸ்டாலின் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு முதன்மை செயலாளர் சத்ய பிரத சாகு, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கே.நந்தகுமார், கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) அம்ரித், மற்றும் துறைசார்ந்த உயர் அதிகாரிகளும் கலந்துக்கொண்டனர்.